# திறவுகோல்

2050 ஆனி
மாத இதழ்

நம்முடைய
நலனுக்காக
என்றைக்கு
சமரசம் ஆகிறமோ ...

அப்போதுதான்
தீமையின் திசையில்
நாம் கால் வைக்கத்
தொடங்குகிறோம்.



இயற்கை வேளாண் விஞ்ஞானி

**ஐயா நம்மாழ்வார்**

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

மண்ணின் மாற்றத்தை நோக்கி


குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

## மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 14)



# செண்பக வனம்

தஞ்சை கோட்டைக்கு வெளியே வந்த ரதம், சின்னவர் களத்தின் நடுநாயகமாய் இருந்த ஒரு காட்சி மேடையின் கீழே நின்றது. ரதத்தில் இருந்து கீழே இறங்கிய ஆழ்வார்க்கடியான், காட்சி மேடையின் மீது ஏறி யாரிடமோ பேசிவிட்டு கீழே இறங்கி வந்தார். அவன் பின்னே 20 வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனும் வந்தான். ஆழ்வார்க்கடியான் அந்த இளைஞனை நோக்கி, ''முகிலா அதோ அந்த இடத்தில் இருப்பவன் தான் மாணிக்கம் என்றார்''. முகிலன் மாணிக்கத்தைப் பார்த்து ''இங்கு வா'' என்று கையைக் காட்டி அழைத்தான்.

மாணிக்கமும் ரதத்திலிருந்து கீழே இறங்கி வருவதற்கு முன்னே கரியனிடம் அமைதி காக்கும்படி சொல்லிவிட்டு முகிலனை நோக்கி போய் கொண்டிருந்த மாணிக்கத்தின் கன்னத்தில் ''பளாரென்று'' ஒரு அறை விழுந்தது.

சற்றும் எதிர்பாராத இந்த நிகழ்வால் நிலைதடுமாறி கீழே விழ போனவன், சட்டென தன்னை சுதாரித்துக் கொண்டு எழுந்த மாணிக்கத்தின் கை தன் இடுப்பிலிருந்த தேக்கங்களியை தேடியது. அது இல்லாத ஏமாற்றத்துடன் ஆழ்வார்க்கடியானை நோக்க, அவன் கையில் அந்த தேக்கங்களி இருப்பதை கண்டு பொய் கோவமும் இளநகையுமாய் அடித்தவனை திரும்பி பார்த்தான்.

மாணிக்கத்தின் முன்னே வந்த ஒரு வீரன் ''ஹ ஹ ஹ ஒரே அடியில் சுருண்டு விழும் உன்னை போன்ற சிறு பிள்ளையெல்லாம் எவன்டா களத்துக்கு அழைச்சிட்டு வந்தது'' என்று ஏளனமாய் சிரிக்க அவனின் பரிகாசதில் பங்கெடுக்க மேலும் இருவர் அங்கே கூடினார்கள்.

''மிகவும் சரியாக சொன்னீர்கள், ஆனால் உங்கள் மூவரில் என்னை அடித்தது யார் என்று சொல்லிவிட்டு சிரித்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.''என்றான் மாணிக்கம்

‘‘ஏன்? அப்பா இன்னும் ஒன்று வேணுமா?’’ என்று கேட்டுவிட்டு மீண்டும் சிரித்தார்கள்.

‘‘இல்லை ஐயா, என்னை யாரும் இதுவரை முகத்தில் அடித்தது இல்லை. அந்த பெருமைக்குரியவர் யார் என்று தெரிந்து கொண்டால் அவருக்கு அவரது உயிரை சன்மானமாக அளிக்கலாமென்று இருக்கிறேன்’’, என்றான் மாணிக்கம்.

‘‘அடடே! அப்படியா சங்கதி, அடேய் வாய் சொல் வீரா, உன்னை அடித்தவனும் நான் தான், அடிக்க போகிறவனும் நானே தான்’’ என்று சொல்லிக்கொண்டே பலமாக அறைய போனவனின் கை மாணிக்கத்தின் கன்னத்தை தொடுவதற்குள், அழகாய் விலகி அறைய வந்த கையில் ஒரு குத்து விட்டான் மாணிக்கம். முழங்கைக்கும் மணிக்கட்டுக்கும் இடையே  குத்து விழுந்ததால் உள்ளே உள்ள எலும்பு முறிந்து வெளியே உள்ள தோலை பொத்து கொண்டு வெளியே வந்து விட்டது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்து முடிந்த இந்த சம்பவத்தால் தன் கைக்குள் இருந்த எலும்பு வெளியே முறிந்து தொங்குவதை பார்த்து அலற தொடங்கி விட்டான், அறைய வந்தவன்.

‘‘தன் நண்பனை அடித்து விட்டானே’’ என்கிற ஆத்திரத்தில் மற்ற இருவரும் மாணிக்கத்தை தாக்க முயல, வாயும் மூக்கும் உடைப்பட்டு கீழே விழுந்தனர். அங்கு ஏற்பட்ட வழக்கத்துக்கு மாறாக ஏற்பட்ட அலறல் சப்தங்கள் சண்டை பயிற்சி செய்து கொண்டிருந்தவர்கள் கவனத்தை ஈர்க்க அங்கு சிறுக சிறுக கூட்டம் அதிகமாக தொடங்கியது’’.

புதிதாய் வந்தவன் வரம்பை மீறுவது அவர்களுக்கு விருப்பமில்லை.
‘‘சர்’’ என்கிற சப்தத்துடன் வந்த சிலம்பம் மாணிக்கத்தின் விலாவை பதம் பார்த்தது..

‘‘ஆ’’ என்கிற அலறலுடன் விலாவைப் பிடித்து கொண்டு மண்டியிட்டு அமர்ந்தான் மாணிக்கம். களத்தின் சூழல் அவனுக்கு எதிராய் இருந்தது. ‘‘இனி வாழ்வோ சாவோ ஒரு கை பார்த்து விட வேண்டும்’’ என்று உள்ளுணர்வு உந்த, அதே சமயம் காட்சி மேடையிலிருந்து  புலியின் உறுமலும் சிங்கத்தின் கர்ஜனையும் கலந்த ஒரு கனைப்பு கேட்ட மாத்திரத்தில் களம் அமைதியானது..

எங்கிருந்தோ ஒரு பயற்சி வாள் பறந்து வந்து மாணிக்கத்தின் முன்னாள் விழுந்தது.
‘‘அப்படியே அமர்ந்திருக்க போகிறாயா.?

இல்லை உன் வாள் திறமையை என்னிடம் காண்பிக்க போகிறாயா? என்று தன் கையிலும் ஒரு பயிற்சி வாளை சுற்றிக்கொண்டே முகிலன் மாணிக்கத்தை கேட்டான். தன் முன்னால் கிடந்த அந்த பயிற்சி வாளை தரையில் ஊன்றி எழுந்து கொண்டே

‘‘இப்படித்தான் பின்னாலிருந்து அடித்துவிட்டு திறமை என்று சொல்வீர்களா’’ என்று சொன்ன மாணிக்கத்தை பார்த்து

‘‘தம்பி இந்த களம் போர்க்களத்தை போன்றது, எங்கிருந்து எது வந்து தாக்கும் என்று தெரியாது. நீ தான் உன்னை பாதுகாக்க வேண்டும்’’ என்று சொல்லிக்கொண்டே முகிலன் வீசிய வாள் மாணிக்கத்தின் கையில் இருந்த வாளை காற்றில் பறக்கச் செய்தது. கூடியிருந்த கூட்டத்தின் சிரிப்பலைகளுக்கு நடுவே மீண்டும் ஒரு வாள் மாணிக்கத்தின் காலடியில் விழ அதை எடுத்த வேகத்தில் முகிலனை தாக்க தொடங்கினான் மாணிக்கம்.

ஆரம்பத்தில் பயிற்சியைப் போல் தொடங்கிய சண்டை, போகப்போக போர்க்களம் போல விறுவிறுப்பானது. அங்கு கூடியிருந்த கூட்டத்தினரின் ஆகா கோஷம் நேரம் ஏற ஏற அதிகரித்துக்கொண்டே சென்றது. முகிலனின் உடம்பில் அங்காங்கே ஓரிரு இடங்களில் அடிபட்டிருந்தாலும் மாணிக்கத்தின் முகத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் அடிபட்டு கிழிந்து ரத்தம் கொட்டத் தொடங்கியது.

ஆனாலும் அவன் கையிலிருந்து அந்த வாளின் பிடி விடவில்லை. அவன் கண்ணில் வெறி குறையவில்லை. ஓரிரு நுணுக்கங்களில் அடி வாங்கிய மாணிக்கத்திற்கு கடைசியாய் ஒரு நுணுக்கத்தை கையாண்டான். முகிலனின் தலையை மேலிருந்து தாக்குவது போல பாவனை செய்து மணிக்கட்டை மட்டும் திருப்பி வாளின் போக்கை மாற்றி எதிரியின் கைப்பிடியில் இறக்குவது தான் அந்த நுணுக்கம். அதை கனகச்சிதமாக முடித்தான் மாணிக்கம்.

முகிலன் வாள் தரையில் கிடந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த கூட்டத்தினர், வாயை பிளந்தார்கள். ஒரு நொடி, திகைப்பில் நின்ற முகிலன், அடுத்த நொடி தரையில் கிடந்த வாளை எடுத்துக்கொண்டு ஆக்ரோஷமாய் மாணிக்கத்தை தாக்க முயலும் தருவாயில் காட்சி மேடையிலிருந்து ஆஜானுபாகுவான ஒரு உருவம் ‘‘தொம்’’ கீழே குதித்தது முகிலனின் வாளை பற்றி கீழே எறிந்துவிட்டு மாணிக்கத்தை கட்டியணைத்து தூக்கினார். வியப்பின் உச்சமாய் நடந்த அந்த நிகழ்வை கண்ட அந்த கூட்டத்தினர் மண்டியிட்டு தலை வணங்கினர் என்ன நிகழ்கிறது என்று தெரியாமலேயே மிரண்டு விழித்தான் மாணிக்கம். அதற்குள் கூட்டத்தில் ஒருவன், ‘‘வீராதி வீரர் பழுவேட்டரையர் வாழ்க, வாழ்க’’, என்று குரல் எழுப்ப மற்றவர்களும் அதையே பின்தொடர சப்தம் விண்ணைப் பிளந்தது. மாணிக்கத்திற்கு தலைகால் புரியவில்லை!

நாம் யாரை காண்கிறோம்? இந்த பெரு வீரரின் கதைகளை எத்தனை கேட்டிருக்கிறோம்? இவரா, என்னை இப்படி தூக்கி கொண்டாடுகிறார்? தனக்கு தானே பேசிக்கொண்டு பிரம்மை பிடித்தவன் போல இருந்த மாணிக்கத்தை உலுக்கி சுயநினைவுக்கு கொண்டுவந்தார் சின்ன பழுவேட்டரையர். தம்பி உனக்கு எந்த கூற்றம், நீ யார்?

''ஐயா நான் பாம்பனி கூற்றத்து செண்பக வனத்தில் இருந்து வருகிறேன் என் தந்தை பெயர் சிவனேசன்'' என்றான் மாணிக்கம்.

அடடே சிவனேசன் மகனா நீ?

நீ கடைசியாக ஒரு நுணுக்கத்தை செய்தாயே, அதை உன் தந்தை தானே உனக்கு சொல்லி கொடுத்தான் என்று கேட்டார் சின்னவர்.

இல்லை ஐயா, என் தந்தை அதிகமாக பயிற்சி செய்வது இந்த நுணுக்கத்தை தான், நான் அதை அதிகமாக பார்த்து இருக்கிறேன், நானும் ஒருமுறை செய்ய முயன்றிருக்கிறேன். அவர் இருந்திருந்தால் அடுத்த மாதம் என்னை இங்கே அழைத்து வந்திருப்பார். ஆனால் அவர் இன்று உயிரோடு இல்லை, சிவபதம் அடைந்துவிட்டார் என்ற மாணிக்கத்தை கோபமும் ஆச்சரியமாய் பார்த்த சின்னப் பழுவேட்டரையர், என்ன உன் தகப்பன் சிவனடி சேர்ந்துவிட்டார் என்று கேட்டவர் நீண்ட பெருமூச்சுடன் எப்படி என்றார்?'' அதற்குள்ளாக ஆழ்வார்க்கடியான் அவர்களை நெருங்க,

''சரி உன் பெயர் என்ன சொன்னாய்?
நீ இப்போது எங்கே தங்கி இருக்கிறாய்?

நீ இனி முதல் இங்கேயே தங்கிவிடு என்று அடுக்கடுக்காய் பேசிக்கொண்டே சென்றவர் முகிலா! இவன் யார் என்று தெரியுமா சென்பகவனத்து சிவனேசன் மகனடா, இவனை உன்னுடன் வைத்துக்கொள் என்று முகிலனிடம் கூறியவர், நீ சென்று உன் ஆடைகளை எடுத்துக்கொண்டு வா என்று மாணிக்கதிடம் கூறினார் பழுவேட்டரையர்.

மாணிக்கமோ, இது என்ன கனவுலகமோ என்கிற தோரணையிலேயே இருந்தவாறு ஆழ்வார்கடியானை நோக்கினான்.

''அவரும் அப்படியே செய்'' என்பது போல தலையசைக்க இரத்தத்தை நோக்கி நடக்கலனான் மாணிக்கம்.

''திருமலை நீ மேல வா'' என்று கூறியவாறே காட்சி மேடையின் படிக்கட்டுகளை நோக்கி பழுவேட்டரையர் நகர அவரை பின் தொடர்ந்தார் திருமலை எனும் ஆழ்வார்கடியான்

தொடரும்..........

# வரலாற்றின் சுவடுகளில் மன்னார்குடி

## பகுதி 5 : முதலாம் குலோத்துங்க சோழனும் வண்டுவராபதி ஆழ்வாரும்!

நம் மன்னை ஸ்ரீ ராஜகோபால சுவாமி கோவில், முதலாம் ராஜாதிராஜ சோழர் காலத்தில் கட்டப்பட்டது. அதனால் ராஜாதிராஜ சோழ விண்ணகரம் என்று அவர் காலத்தில் நம் இராஜகோபால சுவாமி கோவில் அழைக்கப்பட்டது. அவரது காலத்திற்கு பிறகு, கோவில் கருவறை முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது. அதனால் அதற்கு பிறகு இராஜகோபால சுவாமி கோவில் குலோத்துங்க சோழ விண்ணகரம் என்று அழைக்கப்பட்டது. (✸விண்ணகரம் – விஷ்ணுகிரஹம் என்பதன் தமிழாக்கம். கிரஹம் என்றால் இருப்பிடம் என்று பொருள். விஷ்ணுகிரஹம் அல்லது விண்ணகரம் என்றால் விஷ்ணு உறையும் இடம் என்று பொருள்).

முதலாம் குலோத்துங்க சோழர் ’திருநீற்றுச் சோழன்’ என்று மக்களால் அழைக்கப்படும் அளவிற்கு தீவிர சைவ பற்றாளர். ஆனால் அவர் வைணவத்தை ஒரு போதும் வெறுத்ததில்லை. அதற்கு அவரது மெய்க்கீர்த்தியில் வரும் பின்வரும் வரிகளே சான்றாகும். ’திருமாலகத்து பிரியாதென்றும் திருமகளிருந்தென வீரசிம்மாசனத்து வீற்றிருந்தருளின கோவிராசகேசரி வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு’. அதாவது, திருமாலை என்றும் விட்டு அகலாத திருமகள் போல, என்றும் வீர சிம்மாசனத்தில் இருந்து ஆட்சி புரிந்த குலோத்துங்க சோழர் என்று பொருள்.

இது மட்டுமன்றி அவரது அபிடேக மற்றும் சிறப்பு பெயர்களான சப்தம விஷ்ணுவர்த்தனன், இராச நாராயணன் போன்றவைகளும் அவரது வைணவப் பற்றை ஓரளவு விளக்கும். நம் ஊர் இராஜகோபால சுவாமி திருக்கோயிலை திருப்பணி செய்த நிகழ்வே வரலாற்றில் அவரது வைணவப் பற்றை பறைசாற்றும் முக்கிய சான்றாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. (✸மெய்க்கீர்த்தி – கற்பனைகள் மற்றும் புனைவுகள் ஏதுமின்றி மன்னரின் சாதனைகள் மற்றும் வெற்றிகளை விளக்குபவை மெய்க்கீர்த்தி எனப்படும்).

அவர் காலத்தில் மன்னை ராஜகோபால சுவாமி கோவிலில் இருந்த உற்சவ மூர்த்தம் ’வண்டுவராபதி ஆழ்வார்’ என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. வண்டுவராபதி என்பது நமது மன்னைக்கு வழங்கப்பட்ட புராண பெயர்களில் ஒன்றாகும். வண்டுவராபதி ஆழ்வார் உலா எழுந்தருளும் பொழுது, திருப்போனகம் அமுதுப்படி, தளிகை (பிரசாதங்கள்) ஆகியன வழங்குவதற்கும், வண்டுவராபதி ஆழ்வாரின் சிறுகாலை சந்திக்கும் (காலை உணவிற்கும்), காசுகொள்ளா இறையிலி

நிலங்கள், முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவரது ஆட்சிக்காலத்தில் இராஜகோபால சுவாமி கோவிலின் எதிரில் ஒரு பெரிய மாமரம் இருந்துள்ளது. கி.பி. 1018ம் ஆண்டில் ஒரு நாள் அம்மாமரத்தின் கீழ் ஒரு கூட்டம் நடந்துள்ள குறிப்புகள் இராஜகோபால சுவாமி கோவிலின் கல்வெட்டுகளில் உள்ளது. அந்த கல்வெட்டு தரும் தகவல் யாதென்றால், அந்த மாமரத்தின் கீழே இராஜாதிராஜ சதுர்வேதிமங்கலமான நம் ஊர் சபையார் கூடி, காடு, நாடு, நகரம் ஆகியவற்றில் 30000 காசுகள் வசூலித்து, அதை இராஜகோபால சுவாமி கோவிலுக்கு கொடுக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இவ்வாறாக முதலாம் குலோத்துங்க சோழருக்கும், அவர் காலத்தில் நம் ஊர் மக்களுக்கும் ராஜகோபால சுவாமி கோவில் மிகவும் முக்கியமான ஆலயமாக திகழ்ந்துள்ளது வரலாற்றின் சுவடுகளில் பதிந்துள்ளது.

தகவல் உதவி : திருவாரூர் மாவட்ட தொல்லியல் வரலாறு.
South Indian Inscriptions Volume 6 & Inscription No.: 57
பொன்னியின் செல்வன் புதினம்.



எழுத்தாக்கம் :
அபிராமி பாஸ்கரன்

# வாழ்வில் தொடர

சில அன்பின் தேடல்
சில அழகின் தேடல்
சில அறிவின் தேடல்

கிடைக்கா ஒன்றின் ஆவல்
கிடைத்த ஒன்றின் அலட்சியம்
ஒருவரின் வருகைக்காக
ஒருவரின் முடிவிற்காக

இப்படி
எப்படியும்.. அலையும் மனது... இடையே
இடையே
உலகில் வாழ்கிறோம்...

அடுத்த நொடி
நிசமற்ற வாழ்வில்
அடித்து மோதிக்கொண்டு...

வாழ்வின் நியத்தமாய்
நெடுந்தூர பயணம்
சன்னலோர
இறுக்கை
நொடிக்கு ஒரு
சிந்தனை

வாரி அனைத்திடும்
தனிமை

எங்கேயோ பெற்ற
இன்பங்கள்
எங்கேயோ பட்ட
துன்பங்கள்

அழுகையும் புன்னகையும்

மழையினுள் வெயிலாய்
அனைத்தும்
ஊமை நாடகமாய்
முடிந்தது
முடிவுகள் ஏதும்
இல்லாமல்...

விழித்தேன்
எனது நிறுத்தம்...!

போலாம் ரைட்.... ரைட்....

பயணங்களும் பாதைகளும்
தொடர்ந்தபடி

- அகிலா தியாகராஜன்
(ஆயக்காரன்புலம்)

# "ஆற்று மணல் தட்டுப்பாடு - ஓர் தீர்வை நோக்கி" (இரண்டாம் பகுதி)

சிமெண்ட், மணல் மற்றும் ஜல்லி இவற்றின் கலப்பு விகிதம் குறைந்தாலே ஏதாவது ஒரு பொருளின் அளவு குறைந்து விலை குறைய வாய்ப்பு இருக்கிறது. மணலுக்கான மாற்று பொருள் சோதனைகளில், அந்த மாற்று பொருட்களினால் செய்யப்பட்ட சோதனையில் (Lab Test) உறுதி தன்மை குறைவாக தான் பெறமுடிகிறது, இருந்தாலும் அவற்றை கட்டடிடங்களின் உபயோகத்திற்கு பெரிய, சிறிய கட்டுமானங்களுக்கு ஏற்ற மாதிரி செயல்படுத்திக் கொள்ளலாம். இவை அனைத்தும் தமிழக அரசினால் வரையறை (Codes) செய்யப்பட்டு எளிய முறையில் அனைத்து தரப்பினரும் புரிந்து கொண்டு செயல்படும் வகையில் இருக்க வேண்டும். பிற மாற்று முறைகளையும் இந்த பதிவில் பார்ப்போம்.

1. மறுசுழற்சி முறையில் கான்கிரீட் கழிவிலிருந்து மணல், ஜல்லி மற்றும் கம்பி ஆகியவற்றை பிரித்து மறுமுறை உபயோகித்தல்.

சில நேரங்களில் சிறிய மற்றும் பெரிய காங்கிரீட் கட்டுமானங்களை உடைத்துவிட்டு புதிய கட்டுமானங்கள் செய்ய நேரிடும். அந்த சமயங்களை நாம் என்ன செய்கிறோம்? அதிகமாக அவற்றை உடைத்து கழிவுகளாக (Debris) பொது இடங்களிலும், தாழ்வான பகுதியிலும் மற்றும் நீர் நிலைகளில் கொட்டி விடுகிறோம், முக்கியமாக இந்த பிரச்சனையை எல்லா கிராமங்களிலும், சிறு நகரங்களிலும் நடக்கின்றன. பின்னர் இதுவே ஆக்கிரமிப்புக்கும் வழி வகை செய்கிறது. சமீபத்தில் சென்னையில் மற்றும் பிற நகரங்களை வெள்ள பாதிப்பையும் பார்த்துவிட்டோம். இந்த பிரச்சனையை நிரந்தரமாக தீர்வு காண வேண்டும், அதே போல் இந்த கழிவை எப்படி மறுமுறை பயன்படுத்தலாம் என்பதை பார்க்கலாம். வளர்ந்த மேலை நாடுகளில் காங்கிரீட் மற்றும் கட்டிட கழிவுகளை அப்படியே அவர்கள் விட்டு விடுவதில்லை. அவற்றை உடைக்கும் இயந்திரம் மூலம் ஜல்லி,மணல் மற்றும் கம்பிகளை தனி தனியே பிரித்து,பிரித்தெடுக்கப்படும் பொருட்களின் தரத்தைப் பொறுத்து நேரடியாகவோ அல்லது சோதனைக்கு பிறகு பயன்படுத்திக்கொள்கிறார்கள்.இதை தமிழகத்தில் ஒரு தனி மனிதனால் செய்ய முடியுமா என யோசித்தால் செய்வது கடினமே. ஆனால் அரசு முயன்றால் எளிதில் செய்யமுடியும். இதற்காக அரசு துறையான பொதுப்பணி துறை, நெடுஞ்சாலைத்துறை அல்லது நகராட்சி மூலம் திட்டவரையறை செய்து செயல்படுத்தலாம். இதன் மூலம் ஒருவர் கொண்டு வரும் கட்டிட கழிவை உடைத்து தனித்தனியாக பிரித்து, தரசோதனை முடித்து சான்றிதலுடன் தருவதற்கு கட்டணம் நிர்ணயித்து அரசுக்கு வருமானம் செய்துக்கொள்ளலாம். சுருக்கமாக சொல்வதென்றால் அரிசி, மாவு மில்களில் அரைத்து கொடுப்பது போல் செய்யலாம்.

அதே போல் மிக முக்கியமாக தார் சாலைகள் இடும் போது அவற்றை முறையாக செய்யாமல், பழைய சாலைகளின் மீது தொடர்ந்து போடப்படுகிறது. இதனால் பழைமை வாய்ந்த கட்டிடங்கள், கோவில்கள் மற்றும் வீடுகள் சாலையின் மட்டத்தை விட கீழே சென்றுவிடுகிறது இதனால் மழை காலங்களில் நீர் புகுந்து பாதிப்பை ஏற்படுத்துகிறது. கோவில்கள் பாதிப்பு என்றவுடன் கும்பகோணம் நினைவில் வரலாம்.

2. செயற்கை மணல் மூலம் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளல்.
இம்முறையிலும் மலைகளிலிருந்து பாறைகள் மற்றும் கற்கள் மூலப்பொருளாக உள்ளதால், பிற்காலத்தில் மலைகளை பார்ப்பதே அரிதாகிவிடும் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும். சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் இப்போது ஆறுகளுக்கு ஏற்பட்ட நிலையே வரும். ஆதலால் இம்முறையை தவிர்பதே நல்லது.

3. கட்டிட வடிவமைப்பை தேவைக்கேற்ப குறைத்து செய்துக் கொள்ளல்.
கட்டிட வடிவமைப்பு என்றவுடன் அலங்கார வேலையமைப்பு என்று இங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது, இது கட்டிடத்தில் உள்ள உறுப்புகளின் (beam, column, slab) அளவு அதாவது நீளம், அகலம், உயரம், கான்கிரிடின் மற்றும் கம்பிகளின் அளவு (Diameter), ஆகியவற்றை கணக்கீடு செய்து அதற்கேற்றவாறு (optimum design) செய்வதால் கட்டுவதற்கு தேவைப்படும் பொருள்களை சரியான அளவில் பயன்படுத்த முடியும். பெரிய கட்டுமானங்கள் அனைத்தும் சரியான வடிவமைப்பு கணக்கீடு செய்தாலும், கட்டுமான பொருள்களின் சிக்கனத்தை மனதில் வைத்து செய்யும் போது நிறைய சேமிக்க முடியும். அதே நேரத்தில் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பு இல்லாமல் செய்ய முடியும்.

4. வழக்கமான கட்டுமான முறையிலிருந்து மாற்று முறைக்கு செல்லுதல்:
நாம் சென்ற பதிவில் பார்த்தது போல் அனைவரும் ஒரே மாதிரியான கட்டுமான முறைகளில் செய்யும் போது பொருட்களின் தட்டுபாட்டினால் விலை உயர்வு ஏற்பட்டு இது கட்டிடத்தின் மொத்த மதிப்பில் பாதிப்பை உண்டாக்குகிறது. உதாரணத்திற்கு, முன்பெல்லாம் வீட்டில் வளர்த்த மரங்களில் இருந்து நேராக வளர்ந்த, உகந்த வேம்பு, பூவரசு மரங்களை வீட்டு வேலைக்காக பயன்படுத்தினோம், இப்போது அதிகமாக வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேக்கு மற்றும் வேங்கை மரங்களில் செய்யப்படுகிறது. இதனால் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்வும் ஏற்படுகிறது.



வழக்கமான கட்டுமான முறையிலிருந்து மாற்று முறைக்கு செல்லுதல் பற்றி அடுத்த பதிவில் பார்க்கலாம்.

**செ. சதிஷ் குமார்**
மன்னார்குடி.

# கண்களை விற்று!

நிலத்தை உழுது
நீர் பாய்ச்சி
மண்ணோடு பேசி சிலிர்த்து
நீர் போகும் வாய்க்காலில்
கால் நனைத்து
நாற்று வயலில் பாத்தி கட்டி
மக்கி மணம் வீசும் எருவினை பூசி
சேற்றில் புரண்டு
வரிசையாய் நாற்று பாவி
சரம் சரமாய் நடவு நட்டு
பயிர் வளரும்  அழகு தினம் கண்டு
வரப்பு வரை நீரைக் கட்டி
நெல் வரப்பில் நடந்து தூங்கி
தினம் தினம் காத்திருந்து
விளைந்த  நெல்லை அறுத்து வந்து
மனம் குளிர மலைபோல் குவித்து
ஊருக்கே சோறிடும்
பெருமை பொங்க
மகிழ்ந்த எங்களை,

இன்று–
ஹைட்ரோ கார்பன்
எனும் புற்று நோய்
டெல்டா மக்கள்
வாழ்வில்
இடியாய்
இறங்குகிறது.

எங்கள் பிள்ளையாம்
எம் நிலத்தின் உடம்பில் –
ஆறாயிரம்  அடி
ஆழ் துளையிட்டு ...?
நீர் செலுத்தி பின் உள் உடைத்து
வாயுவை வெளியெடுத்து

அதனால் நாளை –
உப்பு நீர் உட்புகுந்து..
நிலம் மலடாகி விவசாயம்
பொய்த்துப் போய்
நல் நிலம் செத்துப்போகும்.
நம் சந்ததியும்
மெல்ல மெல்ல...
அழிந்து போகும்.

எப்பாடு பட்டேனும்
எம் நிலம் காப்போம்.
ஏனெனில் –
கண்களை விற்று
சித்திரம் வாங்க,
மூடர்கள் இல்லை
நாங்கள்!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# அரசியலில் பெண்கள், ஏன் வர தயங்குகிறார்கள்??

முன்னுரை:
இந்திய பாராளுமன்றத்தில் அரசியலில் பெண்களுக்கு 33 சதவீதம் கட்டாயம் இட ஒதுக்கீடு வேண்டும் என்ற மசோதா பல வருடங்களாக கிடப்பில் இருக்கிறது.

33 சதவீதம் ஒதுக்கிடு என்பது ஒருபக்கம் இருக்கட்டும், பல பெண்கள் அரசியலில் ஆர்வம் இருந்தாலும் முழு நேரம் அரசியல்வாதியாக மாறுவதற்கு தயங்குகிறார்கள், காரணம் பல

ஆதிக்கம் நிறைந்த
அரசியல் களம்

நம் நாட்டு கலாச்சாரம் வகையில்  பெண்கள் உலகில் சாத்தியம் என்று எண்ணுவது தவறல்ல. பெண் என்றாலே அவள் இதை செய்ய வேண்டும், இதை செய்ய கூடாது என்பதற்கான கட்டுபாடுகள் பல உள்ளன. அந்த வகையில் அரசியலும் இடம் பெறுகிறது. பெண்கள் அதிகம் ஈடுபடாததற்கு வாழ்க்கை சூழ்நிலைகளும் பெண்ணிற்கே உரிய நாணமும் காரணம்

முன்னோடி:
நம் நாட்டிற்க்கே முன்னோடியாக மட்டுமல்ல, அழகின் நெற்களஞ்சியமாய் விளங்கும் விவசாய கிராமங்களில் பெண்களுக்கு 50 சதவீதம் பஞ்சாயத்தில் உரிமை கொடுக்கப்பட்டு உள்ளது என்று கூறும்போது மெய்சிலிர்கிறது. . பல விதமான உத்திகளை கொண்டு  பல துறைகளில் தன் திறமைகளை பதிய வைத்து கொண்டிருக்கிறார்கள். அவற்றில் எண்ணிலடங்கா நிலையையும் தொட்டுவிட்டன. தொட்டுவிடவும் தயாராகி கொண்டிருக்கிறது.

குடும்ப ஆட்சி முதல் நாடாலும் ஆட்சி மன்றம் வரை கால் பதித்து வெற்றிகளை தன்னுள் கொண்ட என் நாட்டு மங்கைகள் அரசியல் களம் கண்டு மறுமொழி பாராட்டுவது ஏன் என்று என் கருத்துக்கு புலப்படவில்லை!!  பெண்கள் மேடைகளிலும்,  பொது இடங்களிலும் அதிகம் ஈடுபாடு இல்லாமல் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

பதிவு:
பெண்களை பாதிக்கும் பலதரப்பட்ட கருத்துக்கள் எழுவதும், அவர்களை பாதிக்கும் பல மாறுட்ட சூழ்நிலைகளும் அவர்களுக்கு எதிரான அரசியல் தாக்கத்தை உருவாக்குகின்றன என்பது ஒரு பதிவாகும்.

அரசியல் ஈடுபட மறுக்கும் பெண்களை எப்பாடுபட்டாவது கொண்டு வர வேண்டும் என்ற நோக்கில் பல சமூக அமைப்புகள் பெண்களின் நிலையை பல வகையில் தூண்டல் செய்தும் அவர்கள் அதில் ஐயத்துடனே உள்ளார்கள். நாட்டில் உள்ள பெண்களில் 75 சதவீதம் தங்கள் உரிமையை கொண்டு உள்ளார்கள். அதில் 50 சதவீதம் வெவ்வேறு வகையான கருத்துகளுடன் பல துறைகளில் பணிகளை சிறப்பாக செய்து வருகிறார்கள். அவர்களின் கருத்துக்கள் அதாவது 10 சதவீதம் தங்கள் பிள்ளைகளுக்கு அரசியல் சரிவராது என்றும்,
அதில் சிலர் உழைக்கும் வர்க்கத்தினரான எங்களுக்கு அரசியலில் நுழைவதற்க்கு ஆர்வம் இல்லை என்று தாங்களாக வெளியேறிவிட்டனர்.

சிலர் ஆர்வம்:
வாழ்க்கை தங்களுக்கானது மட்டும் தங்களுக்காகவும் வாழ முடியும் என்று என்னும் பெண்கள், வாழ்க்கையில் என்றுமே வெற்றியையும், புகழையும் அடைகிறார்கள். இவர்களில் வீர மங்கைகள் சிலர் மட்டுமே இத்துறையை தங்களின் குறிக்கோளாகவும் தாங்களுக்கு அவர்களே விடும் சவாலாக கொண்டு நம் நாட்டு அரசியல் களத்தில் கால்பதித்த சில பெண்கள், பதித்து கொண்டு இருக்கும் இன்னும் சில அரசிகள் ... மற்ற சகோதரிகளை நான் சொல்லவா வேண்டும்?

வாழ்க்கையும், அரசியலும்:

மக்களின் வாழ்வில் பிரதானமாகி விட்டவைகளில் அரசியலும் ஒன்று. இன்றைய வாழ்வில் பெரும் சவாலாகவும் விளங்குகிறது. எண்ணற்ற, எண்ணிலடங்கா துறைகளை கொண்ட அரசியல் மன்றத்தில் பெண்ணின் நிலையையும் அவர்களின் சூழ்நிலைகளையும், எடுத்துரைக்க ஒரு பெண்ணை தவிர வேறு நல்ல தோழி கிடைப்பது கடினம். எல்லாவற்றையும் வென்று வெற்றி மகுடம் கொண்ட நாம் அரசியல் களம் மட்டும் மீதம் வைத்துள்ளேம்?

வாழ்வில் ஆதிக்கம் கொண்ட ஆண்களே அரசியலிலும் முன்னோடியாக விளங்குகிறார்கள். ஆனால் ஒரு நாட்டின் அரசியலில் பங்கு பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று சொல்லும் வகையில் தான் உள்ளன.

கேள்விக்குறியான வாழ்க்கை:
பெண்களின் கருத்துகளும், பதிவுகளும் இல்லா செயல்பாடுகள் அரங்கங்கள் எவ்வாறு இருக்கும்?
செயல்பாட்டின் முடிவுகள் எப்படி அமையும்?
பெண்களின் ஆதிக்கம் இல்லா சூழ்நிலைகள்?
ஒரு நாட்டின் சரிபாதி பெண் அல்லவா?

துறை:
பெண்களை விழிப்புணர்வு அடைய தொடங்கிய அமைப்பு Association of women for action and research. இன்னல்களை கடந்து என்னால் முடியும் என்ற வகையில் 1992 முதல் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் சென்ற ஆண்டு வரை சிறப்பாக ஆட்சி செய்த பெண்களும் பல, அவர்களின் பெயர்களை சில சமூக காரணங்களால் பதிவு செய்யவில்லை!

தயக்கம்:

பெண்களின் சூழ்நிலைகளை உணர்ந்து மனம் மற்றும் மருத்துவ ரீதியாக சில கருத்துகள் கூறப்பட்டு உள்ளன.
பெண்கள் மனதால் இது தங்களால் முடியாது, வாழ்க்கைக்கு சரிவராது என்ற கருத்துக்கள் சிலர் மனபாங்கு.
இவற்றை தாண்டி குடும்பம் தன் வாழ்வில் பாதி, மீதம் உறவுகள் இவைகளின் கட்டுப்பாட்டினாலும், சமூகத்தில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் இன்னல்கள், கொடுமைகள், சமூக பிரச்சனை மற்றும் விமர்சனங்கள் நடைமுறை இயல்பு இவற்றை கருத்தில் கொண்டு அவர்களின் தயக்கத்திற்கு ஒரு காரணமாக அமையலாம் என்பது என் கருத்து.

மருத்துவம்:

உடல் ரீதியாக பெண்கள் மனபலம் கொண்டவர்கள். ஆனால் உடல் அளவில் அவர்களுக்கு அது சாத்தியம் அல்ல! மேலும் சிறு விமர்சனங்கள் கூட அவர்களின் மனங்களை பாதித்து வேறு பல முடிவுகளுக்கு காரணமாகின்றன. சுற்றத்தாரின் கருத்துகளும், பெண்கள் மேல் கூறப்படும் பொய்யாக சித்தரிக்கப்படும் விவாதங்களும், அவர்கள் மேல் திணிக்கப்படும் ஒரு வகையான சட்ட, சமூக பிரச்சனைகளும் ஒரு காரணமாகின்றன.

என் சிந்தனை:

நாட்டில் முக்கியமான பல சாதனைகளின் பெண்களின் பங்கு அதிக அளவில் இருகின்றன. குறிப்பாக போர் கொடி உயர்த்தியது முதல் தற்போது போராட்ட களம் வரை என் நாட்டு வீர மங்கைகள் நம்மை மெய்சிலிர்க்க வைத்து உள்ளனர்.

இருப்பினும் பெண்களின் பங்களிப்பில் குறைவாக காணப்படும் அரசியல் களத்திற்கு முக்கிய காரணம் நாம் மட்டும் என்று கூறுவதில் நான் மிகவும் வருத்தப்படுகிறேன்.

சமூகம், சூழ்நிலை, விமர்சனம் மற்றும் பல காரணங்கள் இருப்பினும், மதங்கள் சூழ்ந்த சமூக சூழலில் மனதிற்கு கட்டுப்பாடு உண்டு என்பதை போல் அவளின் வாழ்க்கையை

கட்டிப்போட்டு வைத்து இருப்பது ஒரு பெண் என்று கூறுகையில் கொஞ்சம் பிரமிப்பாக உள்ளது. வாழ்க்கையும் பல வகையான தோற்றங்களுக்கு ஏற்றவாறு மாற்றி கொண்டிருப்பவர்களின். இடையே நாம் மட்டும் சில கருத்துகளுடன் சமுகத்தின் முன்னிலையில் பிரச்சாரம் செய்வது என்பது? ஒரு விடையில்லா புத்தகமே.

<u>கருத்து:</u>
எழுத்தின் தேடல் புத்தகம்!!
புத்தகத்தின் தேடல் நூலகம்!!!
நூலகங்களின் தேடல் வாசகர்கள்!!
(மற்றும்)
அரசியலின் தேடல்?
யார் என்பது இன்றைய சூழ்நிலையில் குறிப்பிட தயக்கம் கொண்டு!!
என் உரைகளை முற்றுப் பெற செய்கிறேன்.

<u>முடிவு:</u>
அசியலில் சிலர் வரலாம், இவர்கள் வரகூடாது, இவர் தாம் வரவேண்டும் என்பதும் பலரின் கருத்தாக உள்ளன.

நாட்டில் 100 சதவீதம் மக்களில் 75 சதவீதம் அரசியல் உள்ளன. 25 சதவீதம் அரசியல் களத்தில் உள்ளன. பெண்களின் பங்களிப்பு 7 சதவீதம் என்பது என் கருத்து.

மேலும் அரசியலில் உள்ளவர்களைப் பற்றி அறிக்கை வெளியிடுவதை விட, இன்னார் வரவேண்டும், வருவார்கள் என்ற கணிப்புகளை தாண்டி, வருங்காலம் இனிதே அமைவது இக்கால இளம் வயதினரின் கையில் உள்ளது.

அரசியலில் ...
முனைகளை திறம்பட தீட்டுவதும்,
மழுங்கை ஆக்குவதும்
எவரோ, அவரே, இவரே
என்ற கருத்துகளுடன் தமிழ் மொழிநடை மாறாமல் தன் வெற்றிப் பாதையை இனிதே தொடர்கிறது...
திறவுகோல்



- பா.தமிழரசி
இளங்கலை தமிழ்
அ.வீரைய வாண்டையார் நினைவு ஸ்ரீ பூஷ்பம் கல்லுரி
பூண்டி

# ஒளிரும் ஆசிரியர் (பகுதி 2)

## வண்ணங்களால் மாணவர்களின் வாழ்க்கை வண்ணமயமாக்கும் ஆசிரியை ஜாஸ்மின்!

அரசுப் பள்ளிகள் மீதான புதிய அடையாளங்களையும் நம்பிக்கைகளையும் விதைத்து வரும் மாற்றங்களை விரும்பும் ஆசிரியப் பெருமக்களை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டும் புதிய தேடல் இந்த ஒளிரும் ஆசிரியர் நெடுந்தொடர்... கடந்த இதழில் நம்மால் அடையாளப்படுத்தப்பட்ட தலைமை ஆசிரியை மாலா அவர்கள் பலராலும் அறியப்பட்டு அவரது கல்விச் சேவையைப் பாராட்டி திருவண்ணாமலையில் இயங்கி வரும் ஓர் அமைப்பு புகழ்பெற்ற ஒரு விருதுக்குப் பரிந்துரை செய்துள்ளது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

தமிழகமெங்கும் இதுபோல் மாணவர் நலனை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டு வரும் பல்வேறு ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் சார்ந்த குழுக்கள் அறிமுகமும் கருத்துப் பகிர்வும் நிகழ்வதற்கு இத்தொடர் பேருதவியாக அமையும். அதுபோல், இந்த இதழை வாசிக்கும் வாசகர்கள், கல்வி ஆர்வலர்கள், சமுதாய சிந்தனையாளர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோருக்கு ஆசிரியர்கள் மீதான பார்வைகள் புதிதாகும். மேலும், அரசுப் பள்ளிகள் மீதான கண்ணோட்டம் மாற்றம் பெறுவதோடு மட்டுமல்லாமல் நேயம் வளர வாய்ப்பு ஏற்படும்.

அதே வேளையில் இந்தத் தேடல் என்பது அவ்வளவு எளிதல்ல. ஏனெனில், ஓர் ஒன்றியத்தில் ஐநூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரிய, ஆசிரியைகளில் செம்மையாகப் பணியாற்றி வரும் அடையாளப்படுத்தப்படாத ஆளுமைகளைத் தேர்வு செய்து, அவர்களிடமிருந்து உண்மைத் தரவுகளைப் பெறுவதென்பது மிகக் கடினமான செயலாக இருக்கிறது. பல பேர் எந்தவித ஆதாரங்களும் வைத்துக்கொள்ள விரும்பாமல் அயராது உழைத்து வருவது வேதனையளிப்பதாக அமைகிறது. தரவுகளின் முக்கியத்துவத்தை நிச்சயம் அத்தகையோர் இதன்வழி அறிவர்.

அந்தவகையில், இந்தப் பகுதியில் நாம் அறிய இருப்பவர் சுவர் சித்திரங்கள் மூலமாக மாணவர்களைக் கவரும் திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ஒன்றியம் கோரையாற்றங்கரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இடைநிலை ஆசிரியையாகப் பணிபுரிந்து வரும் திருமதி. ச. ஜாஸ்மின் ஹில்டா ஆவார். இவர் இப்பள்ளிக்குப் பொதுமாறுதல் மூலம் வந்து சேர்ந்து மூன்றாண்டுகள்தாம் ஆகின்றன. தலைமை ஆசிரியரின் ஒத்துழைப்புடன் இவர் செய்து வரும் குழந்தை நேயப் பணிகள் அளப்பரியவை.

நல்ல கற்றலுக்கு அடிப்படை நல்ல வகுப்பறை சூழல் என்பதை உணர்ந்து கொண்டவராய், தம்மிடம் உள்ள ஓவியத் திறனால் குழந்தைகளைக் கவரும் பல்வேறு வண்ணக் கேலிச் சித்திரங்களை நேர்த்தியாக வரைந்து மாணவர் உள்ளங்களைக் கொள்ளைக் கொண்டார். மேலும், முதல் மூன்று வகுப்புகளுக்கு உரிய பாடப்பொருள் சார்ந்த அடிப்படைத் திறன்கள் வளர்ச்சிக்குதவும் எழுத்துக்கள், எண்கள், படங்கள் போன்றவற்றையும் இடம்பெறச் செய்து வகுப்பறையை வண்ணங்களாலும் எண்ணங்களாலும் அலங்கரித்துள்ளது அழகு.



குறிப்பாக, கிராமப்புற மக்களிடையேயும் அண்மைக்காலமாக உருவாகிவரும் ஆங்கில மோகம் குறித்த தவறான புரிதல்களைப் போக்கும் வகையில் இவ் ஆசிரியை ஆங்கிலத்தை முதல் வகுப்பு மாணவர்கள் பிழையின்றி சரியான உச்சரிப்புடன் சரளமாக வாசிக்கவும், இரண்டாம் வகுப்பு முதற்கொண்டு ஆங்கில மொழிக்குரிய அழகிய சாய்வெழுத்துக் கையெழுத்துப் பயிற்சியையும் மாணவரிடையே இயல்பாகப் பழக்கி வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளதைப் பலரும் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. சான்றாக, இரண்டாம் வகுப்பு மாணவி ஒருவர் ஐந்தாம் வகுப்பு ஆங்கில பாடப்புத்தகத்தில் உள்ள வாக்கியங்களைச் சரியான ஆங்கில உச்சரிப்பு முறையில் சரளமாகப் படிப்பதைக் கூறலாம்.

அதுபோல், தனியார் பள்ளிக்கு இணையாக வாரமொருமுறை மாற்றுச் சீருடையில் மாணவர்களை வருகைபுரியச் செய்து எளிய உடற்பயிற்சியுடன் ஆசன முறைகளும்







கற்றுத் தந்து உடல் வளத்துடன் மன வளத்தையும் மேம்படுத்தும் பயிற்சிகள் இவரால் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், கிராமப்புற சிறுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு நல்ல தொடுதல் மற்றும் தீய தொடுதல் முறைகளையும் கை கழுவுதல் வழிமுறைகளையும் உள்ளாடைகள் உடுத்துவதன் அவசியம் குறித்தும் தொடர்ந்து எடுத்துரைத்து வருவது சிறப்பு.

இவர் கற்றலை மேலும் மெருகூட்டிட தம் நண்பர்களின் உதவியுடன் ரூ.20000/= மதிப்புள்ள நவீன வண்ணத் தொலைக்காட்சி ஒன்றை வேண்டிப் பெற்று அண்மையில் கல்வியில் கொண்டு வரப்பட்டுள்ள விரைவுக் கோட்டுக் கற்றல் முறை (Pedagogy with QR Code)யில் உருவாக்கப்பட்டிருக்கும் பாடம் சார்ந்த காணொலிகள் யாவும் மாணவர்கள் கண்டு மகிழ கற்பித்தலின்போது போதிய வாய்ப்புகளை உருவாக்கி வருகிறார்.

இதுதவிர, அண்மையில் பேரிடரைத் தோற்றுவித்த கஜா கோரப்புயலின்போது தலைமையாசிரியருடன் இணைந்து ரூ.40000/= மதிப்பிலான நிவாரண உதவிகளைப் பெற்று வழங்கியது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். ஆக, பள்ளி வளர்ச்சி, மாணவர் நலன், சமுதாய முன்னேற்றம் ஆகியவற்றிற்கு ஓர் ஆசிரியர் பாடுபடுதல் இன்றியமையாதது என்பதற்கு திருமதி.ஜாஸ்மின் ஆசிரியையும் ஓர் எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியும். இவரின் கைவண்ணங்களால் அறியாமை இருளிலும் வறுமைப் பிடியிலும் அகப்பட்டுத் தவிக்கும் பிஞ்சுக் குழந்தைகளின் வாழ்க்கை நிச்சயம் வண்ணமயமாகும்! ஏனெனில் இவரே ஒரு வெளிச்சம்.



தொடர்வார்கள்

**- முனைவர் மணி.கணேசன்**

# நடுகல்



திருச்சி பார்த்தி

சிலவருடங்களுக்கு முன்பு:

வாணர் வம்சத்தில் உதித்த சுத்தவீரன் நாகந்தை சிறுகுட்டி. முந்நூறு வருடங்களாய் இவன் வழியினர் வாணர்குலத்தினருக்கு அறனாய் வழிவழியாய் திகழ்ந்து வருகின்றனர்.

அரிமதைய வாணராயரின் தந்தை மாவலி வாணராயர் காலத்தில் கங்கநாட்டிற்கு கீழ் அடங்கிய மிகச்சிறிய நிலப்பரப்பையே ஆண்டு வந்தார். அச்சமயம் அரிமதையன் துடிப்பான இளவரசன்.

நாகந்தைக்கும், அரிமதனிற்கும், சங்கரக்குட்டியாரே சகல பயிற்சியையும் அளித்தார். மற்றதேசங்களில் குதிரையேற்றம் முக்கிய பயிற்சியென்றால், தகடூர் நாட்டில் வேழமேற்றமே முக்கிய பயிற்சி. அடர்வனப்பகுதியானதால் நிறைய யானைகள் கூட்டமாய் அலையும், சில யானைகள் நாட்டின் எல்லைக்குள் புகுந்துவிடும், அவற்றை விரட்டுவதே  தலையாயபணி, ஆகவே மாவலி வாணவரையர், சங்கரக்குட்டியாரிடம் கூறி சில வருடங்கள் மலைவாழ் குடியினரான பளியர்களிடம் தங்கி வனவிலங்குகளை எதிர்கொள்ள அனுப்பி வைத்தார். கூடவே உற்ற நண்பனான நாகந்தையையும் அனுப்பி வைத்தார்.

அப்போதைய அரசியல் சூழலை தெளிவாய் கணித்து வைத்திருந்தார் மாவலி வாணவரையர், அடிக்கடி இதுகுறித்து சங்கரகுட்டியாரிடம் அலவளாவுவார். பேரரசான பல்லவர் சுரம் இறங்கியதால், புதிதாக சோழன் முளைத்துள்ளான். அவன் நிலைபெற சிலகாலம் பிடிக்கும். அதற்குள் நாம் நம் அருகேயுள்ள கோவூர்நாடு, புறமலைநாடு முக்கியமாய் கங்கநாட்டையும் திட்டமிட்டு வெற்றி கொண்டால் வாணர்குலம், அடுத்த சில வருடங்களில் அசைக்கமுடியா சக்தியாகும் என தனது ஆசையை வெளிப்படுத்துவார்.


(இவ்வளவு தூரம் நாட்டின் முக்கிய ஆலோசனையை மன்னர் பகிரும்அளவிற்கு முக்கியமான ஆள்தானா சங்கரகுட்டியார்?
ஆம், மாவலியின் பால்ய சிநேகிதன் 20 வருடங்களாய் உடனிருப்பவன், பிறந்தது அதியர் குலமாயினும், வாணர் குலத்திற்காகவே வாழுபவன், ஏகப்பட்ட புண்களை மார்பில் வாங்கியவன், வாணதேசத்தின் முதல்அமைச்சன். அரசியல் செல்வாக்கு மிக்கவன்)

அரிமிதையனின் வனவாசம் :

மாவலி தன் மகனை குதிரையில் அனுப்பும்பொழுது, ஒருவருடத்திற்குள் யானைகளிடம் நன்றாய் பழகி, கற்றுக்கொண்டு வரவேண்டுமென அனுப்பிவைத்தார்.

(ஆனால் அதற்குமுன் சங்கக்குட்டியார், அரிமிதையனை சந்தித்தார்.''அரிமிதா உன்தந்தை பெருங்கனவு காண்கிறான், அதை உயிரைக் கொடுத்தேனும் நிறைவேற்றுவது, நம் இருவரின் கடமை, நம் சிறுபடையை வைத்து இக்கனவை காண்பது மூடத்தனம், நீ குறைந்தது ஐந்து வருடங்கள் மலைமுழுவதும் அலைந்து திரி, அங்குள்ள பளியர், முதுவன் மக்களின் அன்பை பெறு, தேவைப்படின் போர்முனைக்கு அவர்களையும் அழைத்து வா! என அரிமிதனையும், நாகந்தையும் தனித்தனியே அழைத்து கூறிச்சென்றார்)

கல்வராயன்மலை அடிவாரம் வரையே குதிரை செல்லமுடியும். பின் மூன்று குறுமலையையும், ஒருபெரும் மலையையும் தாண்டிதான் முதுவர் மக்களை காணமுடியும், அரிமிதன் வரும் தகவலை முன்னரே தெரிந்ததால் அடிவாரத்திலேயே முதுவ மக்கள் முன்னரே வந்துவிட்டனர். பின் சிறிது ஓய்வுக்குப்பின் இருவரும் அவர்களுடன் மலையேற ஆரம்பித்தனர். முதலில் முதுவன் மக்களிடம் சிலகாலம் பழக முடிவெடுத்து அங்கேயே தங்கினர். அரண்மனை உடுப்பை தவிர்த்து, அவர்களின் எளிய உடையை அணிந்து அவர்களுடனேயே மக்களாய் இருவரும் கலந்து அவர்களின் மூலிகைமருத்துவ அறிவையும், வேட்டையாடுவதில் அவர்களின் தனித்திறமையையும் கொஞ்சம் கொஞ்சமாய் கற்க ஆரம்பித்தனர். நண்பர்கள் இருவருக்கும் இது புது அனுபவம். தங்கள் எல்லையில் எப்போதாவது வரும் புலி, காட்டெருமை, சிறுத்தை முதலியவற்றை, இங்கு தினமும் கண்டனர். முதுவர்களின்



வாழ்க்கை அவைகளுடனேயே கலந்தது. ஆரம்பத்தில் பயம்கொண்ட மனம் நாளாக நாளாக அச்சத்தை இழந்தது.
முதுவர்கள் வாழ்ந்தது ஓரளவு சமதளமானதால் திணை முதலியவை கிடைத்தது, உணவிற்கான அவர்களின் தேடல், அரிமிதனுக்கு பிரம்பிப்பை ஏற்படுத்தியது.

முதலில், காலை முதல் இரவு வரை  நீண்டது சில சமயம், கிடைத்த விலங்கினங்களை அங்கேயே தோலுரித்து, கழுவி முதுகில் போட்டு மலையேறினர். இதேநிலைதான் தினமும், சிலசமயம் உணவு கிடைக்காது, வனவிலங்குகளால் தாக்கப்பட்டு உயிரிழக்கும் சம்பவம் அடிக்கடியுண்டு.

ஒருமுறை அரிமிதனும் நாகந்தையும் வேட்டைக்கு சென்று வரும் வழியில் நாகந்தைக்கு காலில், கூறான கல்கிழித்து நன்றாக பாதம் பிளந்துவிட்டது. அந்த இரத்தவாடையை மோப்பம் பிடித்த சிறுத்தையொன்று பின்தொடர்ந்து நாகந்தையின் இருப்பிடம் வரை வந்துவிட்டது, இதையுணராது இருவரும் இருப்பிடம் நோக்கி செல்ல, சிறுத்தை திடீரென வீட்டில் பாய இதை எதிர்பார்க்காத அரிமிதன், சிறுத்தையை பிடித்து சுற்றி விளாசினான், அதுமேலும் வீறுகொண்டு எழ, இளம் முதுவன் ஒருவன் ஈட்டியை எடுத்து தாக்க வேகமாய் விரைந்தான். அவனை கண்டதும் சிறுத்தை நாகந்தை, அரிமிதனை விடுத்து முதுவசிறானை நோக்கி பாய்ந்தது. அதிகம் பயிற்சியில்லாததால் சிறுத்தை அவனது முகத்தில் ஓங்கி அறைய அம்முதுவனின் முகச்சதை பாதி பிய்ந்தது. இரு கண்களும் வெளியே வந்து விழுந்தது. அம்முதுவன் மரணஓலம், ஊரை எழுப்ப அனைவரும் விரைந்தனர். அச்சிறுவனின் கை, தனிச்சையாய் ஈட்டியை சிறுத்தையின் விலாவில் இறங்கியது. சிறிது நேரத்தில் இருவரும் மாண்டனர்.

ஊரே அழுதது, அரிமிதையன் நிலைகுலைந்து போனான், வனவிலங்குகளின் ஆபத்தை முதன்முதலாய் நேராய் கண்டான்.
அம்மக்கள் அவனுக்கு நடுகல் எழுப்பினர். எளியமுறையில் கல்தேர்ந்தெடுத்து அவன் உருவத்தை அதில் பொறித்து புலியைதாக்குவது போன்று செதுக்கினர். அதன் ஓரத்தில் வட்டெழுத்தில்

‘‘கொமாவலிபானருக்கு யாண்டு 24, தகடூர்நாட்டு  புறமலை முதுவன் ராக்கு புலிகுத்தி பட்டக்கல்‘‘ என்று பொறித்தனர். அக்கல்லை ஊரின் எல்லையில் உயர்பதுக்கை ஒன்றை அமைத்து அதனுள்ளே நட்டு வைத்தனர். அரிமிதன் தினமும் அங்கு சென்று சரக்கொன்றை மலர்களால் தூவி சிறிது நேரம் அமர்ந்துவிட்டு வருவான்.
இந்நிகழ்வு அரிமிதனையும், நாகந்தையும் வெகுவாய் பாதித்தது. அதன்பின் கொஞ்சம் கொஞ்சமாய் புலியை வேட்டையாடுவது மட்டுமல்லாமல், ஆயுதமின்றி புலியை எதிர்கொள்வது வரை இருவரும் கற்று தேறினர்.

கிட்டத்தட்ட ஒருவருடம் அம்மக்களுடனேயே வாழ்ந்து தன் பிறந்தகத்தை மறக்கும்

அளவிற்கு அவர்களுடனேயே ஒன்றினான். தினமும் அணில், முயல், கீரி இவற்றை வேட்டையாடியே நண்பர்கள் இருவரும் உண்டனர். இயல்பில் இருவருமே போர்க்குடியினர். ஆதலால், எளிதாக அம்மக்களின் வித்தைகளை கற்றுக்கொண்டனர். ஆபத்துக்ககாலத்தில் பிறரை எதிர்நோக்காது தாமே கிடைக்கின்ற உணவு, மூலிகை இவற்றை கொண்டு வாழும் வண்ணம் முழுதாய் தயாராகினர்.

அரசகுடும்பத்தினர் என்ற நினைப்பே முதுவர்களுக்கு வராவண்ணம் இருவரும் பழகியது அவர்களை வெகுவாய் கவர்ந்தது. அரிமிதனும், நாகந்தையும் அச்சூழலிற்கு நன்றாக மாறினர். தினமும் மலையேற்றம், வேட்டையாடுதல் இவற்றின் காரணமாய் இருவரின் தோற்றமும் முழுதாய் மாறியது. உடல் இறுகி, நிறம்கருத்து, கொண்டைபோடுமளவிற்கு சிகையும் வளர்த்திருந்தர். அவர்களின் இம்மாற்றம் முதுவதலைனுக்கு நம்பிக்கையளித்தது. அரிமிதனும், நாகந்தையும் முதல்தேர்வில் வெற்றி பெற்றதாக கருதினான்.

அதற்கு காரணம், இதற்கடுத்து இவர்கள் பயணிக்கும் மலை மிகவும் செங்குத்தானது. பயிற்சி, உடல்வலு இல்லாதவர்களால் அங்கு போவது சாத்தியமில்லை. இவ்வாறு மூன்றுமலைகளை ஏறினால் சித்தனருவி வரும், அதைக்கடந்தால் அகண்ட சமதளப்பகுதிவரும். அங்கேதான் யானைகள் குழுகுழுவாய் வாழும். பழக்கப்படாத யானைகள் ஆயிரக்கணக்கில் அலையும், அதனை தாண்டிதான் பளியர்களை சந்திக்கமுடியும். அடுத்த சிலவருடங்களுக்கு இருவரையும் அங்கே அனுப்பி தயார்படுத்த சங்கரக்குட்டியார் முதுவனிடம் கூறியிருந்தார்.

இருவரும் தற்பொழுது மலைப்பகுதியில் இடர்களை சந்திக்க திறன் பெற்றதால், அவர்களை பளியர்களை சந்திக்க வைக்க முதுவதலைவன் எண்ணினான். இருவரிடமும் அதனைக்கூறினான். அரிமிதையன் தான் வந்த நோக்கத்தினையும், தனக்கு தேவைப்படும் முதுவர்களின் தேவையை குறித்தும் கூற, அவர்களாகவே முன்வந்து தேவைப்பட்டால் அரசிற்கு முழுஒத்துழைப்பு தருவதாகவும், படையெடுப்பில் பங்கேற்பதாகவும், தங்கள் தெய்வம் முன்பு உறுதியளித்தனர்,

தேர்ந்தெடுத்து நான்கு முதுவன்களை, இருவருடனும் அனுப்பி வைத்தனர். பயணத்தை ஆபத்தில்லாமல் கடக்க தங்கள் தெய்வமான அம்பாராயியம்மன் முன் பெரியகொழுத்த காட்டுப்பன்றியினை பலியிட்டனர்.

பளியர்களை நோக்கி பயணம் கிளம்பியது......

- திருச்சி பார்த்தி

# என் மகள் (கதை - பகுதி 2)

'கொஞ்சம் விட்டிருந்தா செப்டிக் ஆயிருக்கும். நல்லவேளையா அடிபட்ட உடனே வந்துட்டிங்க. இப்போ வலி எப்படியிருக்கு.?' மருத்துவர் கேட்டார்.

' ரத்தம்தான் நின்னுருக்கு. வலி அப்படியேதான் இருக்கு.' படுக்கையிலிருந்தவன் சொன்னான். 'இன்னும் எத்தனை நாளுக்குஇந்த தையல் இருக்கனும்.?' இதுவரை தலை நிமிராமலே பேசினான் முத்து.

'ஒரு மாசத்துக்கு தையல் அப்படியே இருக்கட்டும். காயத்துக்கு எந்த டிஸ்டர்பும் இருக்கக்கூடாது. தானா ஆறிடும். நான் இப்ப வலிக்கு இன்ஜக்சன் குடுக்குறேன்.' சொன்னதும் மருந்து குடுவையைக் கவிழ்த்தார் மருத்துவர். எந்த சலனமும் இன்றியிருந்த முத்துவுக்கு மருந்தை செலுத்தினார். முத்து இரும்பைப்போல இறுகிப் போயிருந்தான். அவனது பதிலும் இறுகிதான் இருந்தது. மருத்துவரால் அதை ஏன் என்று புரிய முடியாததால் அவனது இறுக்கத்தை சுலபமாகக் கடந்து சென்றுவிட்டார்.

மருத்துவர் சென்ற சிறிது நேரத்தில் வேலய்யன் வந்தார். வந்ததும் கோபமாக முத்துவைக் கடிந்தார்.

'ஏம்பா, நான்தான் சொன்னனே. தட்டுல சாப்பிட்டுக்கலாம்னு. அவ்ளோ அவசரமா போயிட்டு இப்படி வெனையம் பண்ணிக்கிட்டு இருக்கியே. நல்லவேளை. மேத்தோல் மட்டுந்தான் பொழந்துச்சு. இன்னும் கொஞ்சம் வேகமா வெட்டியிருந்தா எழும்பே வெளிய பல்லக் காட்டியிருக்கும். அதுக்குமேல இந்த ஆஸ்பத்திரி. பச்சக் கொடுமையா..! காயத்துக்கு தையல் போட்டுட்டு பத்துருவாக்கி மேல பில்லப் போட்டுட்டாங்க. வீட்டாரு இருக்கிறதால கட்டுனாரு. இல்லாத பட்டவங்கனா என்னா பண்ணுவாங்க பாவம். பச்சக் கொடும..!

இறுதியாய், 'உன்னை யாருப்பா அப்படி போய் வெட்டிக்க சொன்னது.?' என்று கேள்வி சுவாரஸ்யத்திற்கு கேட்டுவிட்டார் வேலய்யன். அதுவரை கவிழ்ந்திருந்த தலையை நிமிர்த்தினான் முத்து. வேலய்யனிடம் சத்தமாகச் சொன்னான்.

' நான் வெட்டல.' அவனது வார்த்தைகளின் திண்மைக் கண்டு வேலய்யன் ஒரு நொடி ஆடி நின்றார். அவரது கோபம் அங்கு அர்த்தமற்றதாய் தோன்றியது.

' நீ வெட்டலயா.?'
' ........'
' பின்ன எப்படி.?'
' நானும் அது புரியாமதான் நிக்குறேன். அங்க என்ன நடந்ததுன்னு தெரியல. நான்

பாத்தது இதுதான். இலைய தண்டோட வெட்டிக்கலாம்னுதான் கொடுவாள தூக்கி வெட்டுனேன். தண்டுதான் வெட்டப்பட்டு இருக்க வேண்டியது. ஆனா அது நடக்கல. மாறா கொடுவாள் என் கைய வெட்டியிருந்துச்சி.' பார்வை மாறாமல் வேலய்யனின் முகத்தைப் பார்த்தே நேராக சொன்னான் முத்து.

' அப்படின்னா.?'

' நான் இருந்த கோணத்திலிருந்து பாத்தா நான் வெட்டும்போது கொடுவாள் கீழாவப் போயிருக்கனும். ஆனா அப்படி போவாம கொடுவாள் திரும்ப மேல வருது. எது மேலயும் படல. அப்படி பட்டிருந்தா பொருள்மேலப் பட்டு திரும்ப வந்திருக்கும். ஆனா எந்தப் பொருளும் இல்ல. ஆக, கொடுவாள் எப்படி திரும்ப வந்தது.?' மாறாதப்பார்வை நிலைத்தபடியே சொன்னான் முத்து.

' கொடுவாள் எப்படி திரும்பி வெட்டும்.?' திகைத்தபடி கேட்டார் வேலய்யன்.

' வெட்டிரிச்சே.!' தன் வெட்டுண்ட கையை தூக்கிக் காட்டினான் முத்து.

' கொடுவாள் எப்படி திரும்பி வெட்டும்.?' மீண்டும் கேட்டார்.

' அதைத்தான் நானும் கேக்குறேன்.' டெசிபல் அளவுக்கு கத்தியிருந்தான்.

அவனது கோபம் அப்போதுதான் புரிந்தது வேலய்யனுக்கு. அது அர்த்தமுள்ளதாய் பட்டது. அவனது நிலைக்கொண்ட பார்வைக்கும் வன்மையான பேச்சுக்கும் உள்ள உறவு புரிந்தது. அவன் என்ன கேட்க வருகிறான் என்பதையும் அவரது மனம் உணர்ந்துக் கொண்டது.

அந்த அறைக்குள் முத்துவுடைய குரலின் எதிரொலி இன்னும் இருந்தது.

' நீ என்ன கேக்குற.?' பரபரப்பான மனதிலிருந்து ஒலி மங்கி சொற்கள் வெளிபட்டன.

' நான் பாத்தேன். அந்த மரத்தையே பயத்தோட பாத்துக்கிட்டிருந்திங்க. ஏன்.?'

'..........'

' எனக்கு கட்டு கட்டியிருந்தப்ப துணியில ரத்தம் பாஞ்சி கருமஞ்சள் நெறத்துக்கு மாறிடுச்சு. அத பாத்ததும் உங்களுக்கு நடுக்கமே எடுத்துகிச்சு. ஏன்.?'

' அது... ரத்தம் வேலய்யனுக்கு மீண்டும் நடுங்குவது போலிருந்தது.

' அங்க என்ன இருக்கு.?' நேரடியாக கேட்டுவிட்டான்.

'.........'

' கொடுவாள் ஏன் திரும்பி வெட்டிச்சி.?'

' ..........'

' வாழமரத்தையே ஏன் பாத்திட்டிருந்திங்க.?'

' . . . . . . . . '

' சொல்லுங்க.' மீண்டும் கேட்டான். பதில் கிடைக்கவில்லை.

முத்துவின் ஒரு கேள்விக்குகூட பதில் சொல்ல முடியாதவராகிப் போனார். தன்னைத்தானே நொந்துக் கொண்டார். தன்னை ஊமையாக்கிக் கொள்வதையன்றி

அவருக்கு அங்கு வேறு எதுவும் புரிபடவில்லை. மனதை ஊமையாக்கி செவியை செவிடாக்கி நடைப்பிணம்போல் அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்.

முத்துவுக்கோ சந்தேகம் நிரம்பி வழிய, கேள்விகள் அவனை மூழ்கடித்தன. நுரைப்பூவைப்போல சந்தேகங்கள் சிறுசிறு முட்டைகளாய் பொரிந்து விழுந்தன. வேலய்யனின் மௌனம் அவனது காயத்தின் வலியைவிட ஆழமாகயிருந்தது. அதற்கு வலு சேர்க்குமாறு நடந்ததைக் கண்ட முத்து வேலய்யனின் பதிலுக்காக காத்திருந்தான். சிறிதுநேரம் கழிந்தது.

அங்கே வீட்டுக்காரர் வந்து முத்துவிடம் நலம் விசாரித்தார். ஆனால் வீட்டுக்காரர் பேசியதிலிருந்து வேலை செய்கையில் தவறிவிழுந்து கையில் காயம்பட்டுவிட்டது என்று வேலய்யன் அவரிடம் கூறியிருப்பது முத்துவுக்கு புரிந்தது. அதன்படி நடந்துகொள்ளும் பொருட்டு வேறு எதுவும் பேசாமல் விட்டுவிட்டான் முத்து. வீட்டுக்காரர் சென்றப்பிறகு வேலய்யன் மெதுவாக அறைக்குள் வந்தார். அவரது படபடவென்று பேசும் பண்பு முழுவதும் அற்று காணப்பட்டார்.

' வந்துட்டு போனாரே. என்ன சொன்னாரு.?' ஒருவழியாய் பேசினார்.

' நலம் கேட்டுட்டு போனாரு. நான் அடிப்பட்டிருக்கிறதால் வேல நிக்குமானு கேட்டாரு. நான் அந்த இடத்துல இல்லன்னாலும் சொன்ன மாதிரியே டைம்ல வேலையை முடிச்சி கொடுப்போம்னு சொன்னேன். தாமதமாகும்னு கவலைப்பட வேணாம்னு சொல்லிட்டேன். நானும் இன்னிக்கே வீட்டுக்கு போலாமாம். ஆனா இதெல்லாம் இருக்கட்டும். நான் கேட்டதுகென்ன பதில்.?'

வேலய்யன் முகம் சுருங்கி மெதுவாக தலைத் தொங்கியது. அமைதி ஆட்கொண்ட சில நொடிகள் கழித்து மௌனம் கலைத்தார்.

' வெட்டாத வாழமரம் - அது
பட்டுபோவாத பூ மரம்
பட்டாட போத்தினப்போல
புத்தாட கட்டி வரும்.
தள்ளாத கொழ தள்ளி
அல்லாத பணமில்ல.
புல்லோடு சினேயிதம்
சொல்லாம வந்துடுச்சே
புல்ல பறிச்சி போடுறேனு
பொண்ண பறிக்க போனானே.
கொல்லாதனு சொன்னேனே சாவான்
கொன்னுப்புட்டு போயிட்டானே.
பட்டாட போத்தல - பச்ச
பாடையில சேக்கல

தீக்கிரையாச்சே உசுரு
குழிக்குள்ள போச்சே.!’

பாடிய பாட்டில் என்ன அர்த்தமென்று முழுமையாக விளங்காமல் வேலய்யனையே கூர்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தான் முத்து. கண்ணீர் விழுந்ததைக் கண்டான்.

’ ஆமாண்டா, ஆமா. அங்க இருக்கு.’ அதி சத்தத்தில் சொன்னார். மூக்கை உறிஞ்சிக் கொண்டு வெட்டும் சிரிப்போடு பித்தனாய் பேசினார் வேலய்யன்.

’ அங்கதான் இருக்கு. அது வாழ மரமில்லடா. என்ன வாழ வச்ச மரம்டா. என் கொலசாமி. செத்தப்பின்ன சன்னதமா தூங்குற இடம் அது. அருவா கொடுவானு எதையும் அங்க காட்டக்குடாது. காட்டுனா இப்படிதான் வெட்டும். ஹ்ஹ்ஹ்...’ வேலய்யனின் பேச்சில் தெரிந்த கொடூரம் அவனைப் பாதித்தது. ஆனால் தெளிவாகக் கேட்டுக் கொண்டான்.

’ யார் செத்தது.?’ கண்கள் விரிய கேட்டான் முத்து.
’ சூர்யா.’
சில நொடிகள் கடந்த பின் சொன்னார். ’ சூர்யா வீட்டாரோட ஒரே மகள்... கொஞ்சங்கூட தயவு தாசனமில்லாம... ஒரேயடியா.. போச்சி. மண்ணுக்கடியில...’ கண்ணீர் வழிந்து கீழே விழுந்தது.

’ அதுவரை படுக்கையிலிருந்தவன் எழுந்து வந்து வேலய்யன் அருகில் நின்றான். வேலய்யனை அழுகையிலிருந்து தேற்ற முடியாது என்பதை அறிந்தபின் அவரது அழுகையில் பங்குக்கு அமர்ந்தான் முத்து.

’ எனக்கு முழுசா சொல்லுங்கணா. எனக்கு தெரிஞ்சாவுனும்.’ முத்து கேட்டப்பிறகு தான் வேலய்யன் அழுகையில் நிதானப்பட்டார்.

’ சூர்யானு பேருகேத்த நெறம். ரொம்ப நல்ல பொண்ணு. என்ன பொருத்தவர சூர்யா எனக்கும் மகதான். நுணுக்கமான மூலக்காரி. படிப்புன்னா படிப்பு அப்படியொரு படிப்பு. தெளிவா பேசுறப் பொண்ணு. வழக்கமா ஒரே பொண்ணுன்னா எல்லோரும் செல்லமா வளப்பாங்கனு பேரு. ஆனா இங்க அப்படியில்ல. ஒரே பொண்ண பொத்தி பொத்தி வளக்குறோம்னு ரொம்ப அடக்கி அடக்கி வளத்துட்டாங்க. ஆனா அதுவே அவளுக்கு எமனா மாறும்னு யாரும் எதிர்ப்பாக்கல.’ கண்களைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தார்.

’ சமைக்க ஆள் வேணும்னு தேடுனப்ப என்னப்பத்தி தெரிஞ்சிருந்து சூர்யா சொன்னதாலதான் இங்க இந்த வேலையும் எனக்கு கெடச்சது. சூர்யா நெறைய

படிக்கும். நெறைய புத்தகம் வச்சிருந்துச்சி. எப்படிமா இவ்வளவு படிக்கிறனு கேட்டா, படிக்கிறது எப்பவும் முடியிறதே இல்ல, அது தொடர்ந்துகிட்டே இருக்கும்னு சொல்லுவா. காலேஜிக்கு படிக்க போனிச்சி.

அந்த சதுரங்க விளையாட்டு இருக்கே... செஸ்ஸு. அதுன்னா காலேஜில போட்டி போட்டு ஜெயிச்சுகிட்டு வந்துடும். காலேஜ் முடிஞ்சு கொஞ்சநாள் வீட்டுல இருந்தப்போ, எதாவது கிளாஸ் போகலாம்னு நெனச்சி கேட்டா. ஆனா வீட்டுக்காரர் ஒத்துக்கல. அப்படியும் இப்படியும் அடம்புடிச்சி அனுமதி வாங்கிட்டா. அவங்களுக்கு பொட்டப்புள்ளங்கன்னா வெளிய விடக்கூடாதுன்னு எண்ணம். சூர்யாவுக்கு அடங்கிபோய் கெடக்க புடிக்கல. வெளிய போகனும்னு ஏங்கும். அது எனக்கு மட்டும்தான் தெரியும். கிளாஸ் போகனும்னு அனுமதி வாங்குனதே அடைச்சல ஒடச்சி வெளிய இருக்கத்தான். பறவை மாதிரி சுதந்தரமா இருக்கனும்னு ஆசையா சொல்லும்.' வேலய்யன் சற்று நீண்ட பெருமூச்செடுத்துக் கொண்டார்.

' அப்படி கிளாஸுக்கு படிக்கபோன இடத்துலதான் ஒரு பையனோட பழக்கம் ஏற்பட்டிருந்துச்சி. என்னமோ தெரியல. சூர்யா அவனை ரொம்ப விரும்பிட்டா. ஆனா இது வீட்டுல தெரிஞ்சா என்னாகும்னு அவ அப்போ யோசிக்கல. வீட்டுக்கு தெரியாம பாத்துக்கிட்டா. இருந்தாலும் என்கிட்ட மட்டும் இந்த விசயத்தைப் பத்தி சொல்லிடுச்சி. ஏன்னு தெரியல. என்மேல சூர்யாவுக்கு நம்பிக்கை இருந்தது. பெத்தவங்க மேலகூட இல்ல. அதனாலதான் அவ என் கொலசாமி.

அந்த பையனப்பத்தி என்கிட்ட மட்டும் பேசும். அப்படி நான் கேட்டவரையில அவன் நல்லப் பையந்தான். பொம்பளைய மதிச்சு நடந்துக்குற பக்குவம் இருக்கு. நல்ல பண்பும் அறிவும் இருக்குறவன். நல்லா படிச்சவன்னு நெறைய அவனப்பத்தி சொல்லிச்சி. பொதுப்பிரச்சனைய எதுத்து நின்னு பேசுவானாம். நல்லா புத்தகம் படிப்பானாம். அப்படி படிக்கிறதப் பாத்துதான் ரெண்டு பேருக்கும் பழக்கமே வத்துச்சாம். படிச்சதப்பத்தி ஒருத்தருக்கு ஒருத்தர் பேசிக்குவாங்கலாம். எனக்குகூட குடுக்க ஒரு புக் வச்சிருந்தா. ஆனா பிரச்சனையே பையன் வேற சாதி.

திடீர்னு ஒருநாள் விசயம் வீட்டுல தெரிஞ்சிடுச்சி. வீட்டுக்காரர் ஊர்ல எல்லாருக்கும் தெரிஞ்ச ஆளு. யாரோ ஒருத்தர் பாத்துட்டு சொல்லியிருக்கனும். அதுக்கப்புறம் வீட்டுக்காரர் சூர்யாவை நடத்துன விதமே மோசம். சூர்யாவ வீட்டுக்குள்ளயே அடச்சி வச்சிட்டாங்க. அவகிட்ட யாரும் பேசல. யார்கிட்டயும் பேசவிடல. வீட்டுக்குள்ளயே இருந்ததால வெளிய என்ன நடக்குதுனு சூர்யாவுக்கு தெரியல.

ஆனா வீட்டாரு வெளிய பிரச்சனை பண்ணிக்கிட்டிருந்தாரு. விசயம் தெரிஞ்ச அடுத்த நாளே அந்த பையனைப் புடிச்சி மெரட்டுனாங்க. அவனோட அப்பனையும் அடிச்சிட்டாங்க. அவங்கள ஊரவிட்டே போக சொன்னாங்க. அவனை ஆள் வச்சி

கொன்னுருவோம்னு மெரட்டியும் போகல. ஆணித்தரமா நின்னானே பாத்துக்க. அவனை எப்படி ஒழிக்கிறதுன்னு யோசிச்சு ஒடனே ஒரு கொள்ளை கேஸ்ல அவன மாட்டிவிட்டு ஜெயிலுக்கு அனுப்பிட்டாங்க. அவனோட பெத்தவங்களும் வீட்ட காலி பண்ணிக்கிட்டு போயிட்டாங்க.

சரி, இதோட நிப்பாங்கனு பாத்தா நிக்கல. நடந்ததெல்லாம் சூர்யாவுக்கும் தெரியல. வெளிய நடக்குறதும் உள்ள நடக்குறதும் எனக்கு தெரிஞ்சும் எந்த உதவியும் சூர்யாவுக்கு செய்ய முடியல. வீட்டாரும் இதெல்லாம் யாருக்கும் தெரியாம பாத்துகிட்டாரு. எங்கள யாரையும் சூர்யாகிட்ட பேசவிடல. சூர்யாவையும் பேசவிடல. வீட்டுக்காரம்மா எப்பவுமே அவளை அடச்சிருந்த மேல் ரூம்கிட்டயேதான் இருந்தாங்க.' வேலய்யன் நிறுத்தினார்.

' அந்தப் பொண்ணுக்கு என்னாச்சி.?' வேகமாக. கேட்டான் முத்து.

' சூர்யா சரியான வைராக்கியக்காரி. நியாயக்காரி. அவளுக்கு நியாயம்னு பட்டத செய்ய தயங்கவே மாட்டா...

பாவம்பா சூர்யா. அந்த பையனுக்கு என்னாச்சுனு தெரியாம நாளுக்கு நாள் சுருங்கி போயிடுச்சி. முதல்ல யார்கிட்டயும் பேசவிடாத இருந்தாங்க. வீட்டாரு மட்டும் எல்லாரும் என்ன செய்யனும்னு சொல்லுவாரு. வீடே அவரோட கன்ட்ரோலுதானே. வருவாப்ல ஏதாவது சொல்லுவாப்ல, போயிடுவாப்ல. கொஞ்சநாள் கிளாஸ் போறங்குற பேர்ல சந்தோசமா வெளிய போன பொண்ணுக்கு திரும்பவும் அதே அடைச்சல் வந்ததும் மனசே வெறுத்து போயிட்டா. அதுவரை தான் ஒழுக்கங்கிற பண்பாடுக்காக அடக்கப்படுறதா நெனச்சிட்டிருந்த சூர்யாவுக்கு, இப்போ நடக்குறத ஏத்துக்க முடியல. அப்பதான் தன்னோட பெத்தவங்க மூலமா சாதிங்கிற வேத்துமைய தெரிஞ்சிக்கிட்டா. இதை வச்சி அவங்கள பிரிக்கிறத அவளால ஒத்துக்கவும் முடியல. ஏத்துக்கவும் முடியல. போதாதுக்கு வீட்டாரு வேற சம்பந்தம் பேசிட்டு இருந்தாரு வீட்டுக்காரம்மா என்னாரமும் சூர்யாகிட்ட அந்த பையனை மறந்துட்டு அவங்க சொல்ற பையனை கல்யாணம் பண்ணிக்க சொல்ல நச்சரிச்சாங்க. மறுத்துட்டா. திரும்ப திரும்ப வற்புறுத்துனாங்க. ஆனா சூர்யா மனசு திடமா இருந்துச்சு. இதே வேறப் பொண்ணா இருந்தா வெளிய ஓடிப் போயிருக்கும். இல்லன்னா தன்ன மாச்சிட்டு போயிருக்கும்.

அப்படி நாளாக நாளாக அவ யார்கிட்டயும் பெத்தவங்களோடும் பேசறதேயில்ல. சரியா சாப்பிடுறதில்ல. ரூம்குள்ளயே மாட்டிக்கிட்டா. அம்மாகிட்டகூட எதுவும் பேசுல. இப்படியே சுருங்கி போயிட்டா.

நடுவுல ரெண்டு மொற பொண்ணு பாக்க வந்தாங்க. அவங்க முன்னால வேணுமுன்னே மரியாதைக் கொறவா நடந்து சம்பந்தம் நடக்காம தடுத்துட்டா. கொஞ்சநாள் வெளியூர்ல கொண்டுபொய் வச்சிருந்தாங்க. அங்கயாவது மனச

மாத்தலாம்னு பாத்தும் வேலைக்கு ஆகல. திரும்ப வீட்டுக்கே அனுப்பிட்டாங்க. அவ மனசு ரொம்ப வாடிப்போச்சு. இவ்வளவு தூரம் மோசமான பிறகும் பையனை மறக்கவேயில்ல. தன்னோட காதல்ல திடமா இருந்தா பாரு...

இதையெல்லாம் பாத்துட்டு கடைசில வீட்டுக்காரங்க ரெண்டு பேரும் தங்களோட சுயரூபத்த காட்டிட்டாங்க.'

' என்ன பண்ணாங்க.?' அதை வேகத்தோடு கேட்டான் முத்து.
' கொன்னுட்டாங்க.' குனிந்த தலை ஆட்டியபடி விரக்தியான குரலில் அநாயசமாகச் சொன்னார் வேலய்யன். இதைக் கேட்டதும் ஒரு நொடி குலுங்கி நின்றது முத்துவின் உடல்.

' வீட்டாரு ஒருநாள் சூர்யாவைப் புடிச்சி பயங்கரமா அடிச்சிட்டாரு. ரொம்ப கேவலமா திட்டுனாரு. அந்த பையனையும் திட்டுனாரு. வீட்டுக்காரம்மாவையும் யாருக்குடி இவள பெத்தனு கேட்டுட்டாரு. அதுவரைக்கும் எந்தநாளும் அப்படி நடந்துக்காத மனுசன் அன்னிக்கி அவ்ளோ மோசமா நடந்துக்கிட்டாரு. சூர்யாவை அடிச்ச சத்தம் வெளிய தூரமா இருந்த எங்களுக்கு கேட்டது. நல்லா அடிச்சு போட்டுட்டாங்க. எனக்குன்னா நெலக் கொள்ளாம அல்லாடுனேன். தடுக்கலாமா வேணாமானு தெரியாம தவிச்சேன். கீழ வந்து ஒரு ரூம் பக்கத்துல அவங்க பேசிக்கிட்டாங்க. வீட்டுக்காரர் இனிமே என்ன செய்யலாம்னு கேட்டாரு. அதுக்கு அந்தம்மாதான் நம்மளே நம்ம பொண்ண அடப்பொணமா ஆக்கிடலாம்னு சொன்னிச்சி. அதுக்கு மேலயும் என்னால சும்மாயிருக்க முடியல. நான் இதைக் கேட்டதும் அவங்ககிட்ட ஓடிப்போய் அப்படிலாம் எதுவும் செய்ய வேணாம், சூர்யா நல்ல பொண்ணு, சொன்னா கேட்டுக்கும், கொஞ்ச நாள்ல மாறிடும், அப்படி இப்படினு சொன்னேன். அவங்க என்ன பாத்ததும் எதுவும் பேசாம நின்னதை அப்பதான் கவனிச்சேன். நான் சொன்ன எதையும் அவங்க வச்சிக்க மாட்டாங்கனு புரிஞ்சிக்கிட்டேன். அப்போதான் வேலைக்காரங்க எங்க எல்லாரையும் ஒன்னா கூப்புட்டு ஒரு வாரம் எங்களுக்கு லீவு குடுத்து அனுப்பிட்டாரு. எனக்கு மனசில்லனாலும் போயாகனுமே. இருந்தாலும் கடைசியா ஒன்னு சொன்னேன். சூர்யாவ எதுவும் பண்ணிடாதிங்க, கொஞ்சநாள் போனா மனசு மாறி வருவானு சொன்னேன். அவங்க கேட்டுக்கிட்டாங்கலே ஒழிய மனசுல வேற எண்ணத்தோட இருந்தாங்க. அவங்க என்ன பண்ணுவாங்கனு தெரிஞ்சும் வேற வழியே இல்லாம நான் போயிட்டேன். அதுதான் நான் செஞ்ச பெரிய தப்பு. என் மகள நான் விட்டுட்டு வந்துட்டேன். அவங்க அவளக் கொன்னுட்டாங்க.'

' ஏன் தடுக்கல.?'

' பெத்தவங்கப்பா... நான் சூர்யாவ மகளா பாத்தாலும் வீட்டுக்காரங்க என்ன வேலக்காரனாதானே பாத்தாங்க. எங்கள தொட்டுகூட பேசுனதில்ல. ரெண்டடி தூரம் தள்ளி நின்னுதான் பேசுவாங்க. சம்பளத்தக்கூட கையில தரமாட்டாங்க. வச்சிட்டு எடுத்துக்க சொல்லுவாங்க. வீட்டுக்காரம்மாவுக்கு கேன்சர் நோய். அதே பாதி ஒடம்ப தின்னுடுச்சி. மீதிதான் நடமாடிக்கிட்டிருக்கு. ஆனா யாரையாச்சும் திட்டுனாக்கா நோவு வந்து சாவனும், நோவு வந்து சாவனும்னுதான் திட்டும். யாராவது அடிச்சாக்கூட நாலு அடிக்கி தாங்காது. ஆனா சாதின்னா மடியில கட்டி காப்பாத்தும் பாரு. அந்தப் பையனை கேஸ் போட்டு

ஜெயில்ல தள்ளுறதுக்கு ஐடியா குடுத்ததே அதுதானே. சொந்த மகளேனுகூட பாக்காம அடப்பொணமாக்கச் சொன்னதும் அதுதான்.

வெளிய பேச்செல்லாம் மரியாதத்தான். ஆனா உள்ளக்குள்ள, ச்செய்... அவங்கல்லாம் ஒருத்தருக்கொருத்தர் விட்டவங்க கெடையாது. இவங்களையெல்லாம் அந்த பீமனார்தான் அடிச்சி தூக்கனும். பீமனார்தான் அடிச்சி தூக்கனும்.' இதையெல்லாம் மனதுக்குள் வாங்கிக் கொண்டிருந்தான் முத்து. அவனிடம் அப்போது சொல்வதற்கு ஏதுமில்லை. ஆனால் கேட்பதற்கு நிறைய கேள்விகள் இருந்தன.

' கொஞ்சநாள் கழிச்சி நாங்க வேலைக்கு திரும்ப வந்தோம். வீட்டுல எல்லாரும் இருந்தாங்க. ஆனா சூர்யா இல்ல. கேட்டோம். வேலைய மட்டும் பாருங்கனு சொல்லிட்டாங்க. அப்புறம் மெதுமெதுவா தெரிஞ்சவங்க வீட்டுக்கு அனுப்பியிருக்கோம்னு சொன்னதா  சொன்னாங்க என்னோட வேல செய்றவங்க. பொய்யி. சூர்யாவோட படம் வீட்ல ரூமுக்கு ரூம் மாட்டியிருக்கும். அதெல்லாம் இல்ல. துணிமணி பொருளெல்லாம் இல்ல. பின்னாடி கொள்ளப்பக்கம் மண் மேடா தெரிஞ்சது. அதுல வாழக்கன்னு நட்டிருந்தாங்க. ஆனா பக்கத்திலிருந்த வாழை மரத்துல மட்ட தீஞ்சிருந்தது. இதையெல்லாம் ஒன்னா பாத்ததும் எனக்கு தெரிஞ்சிடுச்சி. சூர்யாவ எரிச்சிட்டாங்கப்பா. அப்படியே சுருண்டு விழுந்துட்டேன். என்னால எதையும் கேக்க முடியல.' கைகளை இறுக்கி வாயோடு வைத்துக் கொண்டு அழுதார் வேலய்யன். சிறிது நேரம் அழுகைக்கு அனுமதித்தப்பின் கண்களைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தார்.

' ஒருநாள் அவளோட ரூமுக்குள்ள போனப்ப, எனக்காக ஒரு புத்தகம் வச்சிருக்கேன்னு சொல்லி காட்டின புத்தகத்த பாத்தேன். எடுத்துகிட்டு வீட்டுக்கு போயிட்டேன். அதுக்குள்ள ஒரு லெட்டர் இருந்துச்சி. ஆனா அத நான் படிக்கல.

அன்னிக்கி செவுத்துல மாட்டியிருந்த படமெல்லாம் எங்கனு கேட்டியே, அப்பவே மனசுல பட்டுச்சி, நீ சூர்யாவப் பத்தி தெரிஞ்சிக்கப் போறன்னு. கொடுவாள் திரும்பி வெட்டிச்சினு நீ சொன்ன உடனே நான் புரிஞ்சிக்கிட்டேன், சூர்யாதான்னு. இது சூர்யாவோட நேரம். இனி அவ கேள்வி கேக்கப் போறா. இனி அவ கேள்வி கேக்கப் போறா...' இரண்டுமுறை சொல்லி நிறுத்தினார் வேலய்யன்.

அந்த வீட்டின் சுவர்கள் காலியான இடத்தைக் காட்டி சொல்ல வந்த கதை இதுதான் என்பது புரிந்தது. சுவற்றிலிருக்கும் வெறும் ஆணிகளின் குரல்கள் கேட்டது. அரிவாள் வெட்டும் நொடி வாழைமரம் சொல்ல வந்ததும் தெரிந்தது. வேலய்யன் சொன்ன கடைசி வார்த்தைகளும் கேட்டுக் கொண்டேயிருந்தன.

' இது சூர்யாவோட நேரம். இனி அவ கேள்வி கேக்கப் போறா.
இது சூர்யாவோட நேரம். இனி அவ கேள்வி கேக்கப் போறா...'

முத்து மருத்துவமனையிலிருந்து கிளம்பினான். சமூகத்தைப் பற்றிய அவனுடைய பார்வையே மாறியிருந்தது. இன்னும் பேதம் போற்றும் சமூகமாக இருக்கிறதை அவனால்

ஏற்கவே முடியவில்லை. வீட்டுக்கு போகும்வரையில் அவன் கண்ட காட்சிகளிலெல்லாம் பேதமை நிறைந்திருந்தது. எப்படிப்பட்ட சமூகத்தில் தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம் என்று அன்றுதான் முத்துவுக்கு ஆழமாகப் புரிந்தது. இவ்வளவையும் பார்த்தவனுக்கு இனி என்ன செய்யப்போகிறோம் என்று கேள்வி எழுந்தது. வீட்டுக்கே வந்தாலும் சூர்யாவைப் பற்றியே மனம் பதைத்துக் கொண்டிருந்தது. கண்ணிலிர்ந்து அவள் விலக மறுத்துவிட்டாள்.

முத்து வீட்டிற்கு பின்னால் நிற்கிறான். முத்து வாழைமரத்தை ஓங்கி வெட்டுகிறான். மரம் சூர்யாவாக மாறி பற்றிக் கொண்டு எரிகிறது. சிவப்பு நிறத்தில் புகைசூழ நிற்கிறான் முத்து.

பதறிக்கொண்டு எழுந்தான். வேலய்யன் கடைசியாக சொன்ன அதே வார்த்தைகள் மீண்டும் மீண்டும் செவியில் ஒலித்துக் கொண்டேயிருந்தன.

’ இது சூர்யாவோட நேரம். இனி அவ கேள்வி கேக்கப் போறா.
இது சூர்யாவோட நேரம். இனி அவ கேள்வி கேக்கப் போறா...’

தொடரும் ...

- கார்த்தி டாவின்சி

---

# மனம் பேசுதே

வாழ்க்கை என்பது
ஒரு கனவாக இருந்துவிடுகிறது!!

இங்கு சந்தோஷம், துக்கம்
இரண்டும் கலந்துவிடுகிறது!!

வாழ்வதற்கு ஒரு பிறவி
என்று தான் ஆகிவிடுகிறது!!

அதிலும் துன்பம்
நிறைந்துவிடுகிறது!!

முடிவில்
மரணம் தந்துவிடுகிறது!!



- பா.எழிலரசி
இரண்டாம் ஆண்டு புவியல் துறை,
அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புட்பம் கல்லூரி,
பூண்டி.

# இதயம்சுடும் ஆரத்தி

எதிர்நின்று சொக்கி
பருவ விழிகளால் வாள் வீசி மோத
இதயம்சுடும் ஆரத்தி
இரவின் பெருங்காட்டை
அடாவடியாய் தீய்த்துப்
பெருகிடும் சாம்பலை
வெண்மேகமாய் பூசி
மகிழ்ந்து விளையாடும்
யாமந்தாண்டியும்
என் விரல்கோர்த்து,

எவ்விதக் கூச்சமுமின்றி
குழந்தையென
வளர்ப்பு விலங்கென
நேயத்தால் ஒட்டிக்கொள்ளும்
உன் செல்லக் குறும்புகளை
யாவரின் முன்னும்
தைரியமாய் கட்டவிழ்த்துத்
தோழியின்பின் ஒளிந்து
செவ்விதழ் ஆழங்களில் மூழ்கடிக்கும்
உன் நிறைமதிபொலிவு
உயிர்க்கூசி சாய்க்கிறது
தாமரை மடியில் சதாயெனை....

இரைக்காக காத்திருக்கும்
மீன்கொத்தியின்
மென்பஞ்சு இறகுகளென
என் உடமைகள் யாவற்றையும்
மெய்க்கூச ஸ்பரிசித்துப்
போகிறபோதும் வருகிறபோதும்
வேண்டுமென்றே
சொக்கி உருக்கிடும்
உன் ஆடம்பர வம்புகளை
என்தோட்டத்து ரோஜாக்கன்றுகளிடம்
சொல்லிவைக்கிறேன்.....

என்றைக்கேனும் ஓர்நாள்
நிறைந்துபூக்கும் அவைகள்
உன் கார்குழலை அலங்கரித்துத்
பொத்திவைத்திருக்கும்
மொத்தத்தையும்

தேவகானமாய் இசைக்கலாம்
நன்மனைவதுவை ஏற்காமல்
அதுவரையில் எனக்காக
அவ்விடம் காத்திரு உயிரே!

## - பொன்.தெய்வா

ஐவேலி

# என்னவளே

''மாடியில் நீ நிற்கும் அழகை
பார்க்க தானே நிலவும் துடிக்குது''

''நம் அருகில் இருந்த நிலா
எங்கோ தூரமாய் தெரிகிறதே
என்று நட்சத்திரங்களும் வியக்குது''

''உன் மேல் வெப்பத்தை வீச
தான் சூரியனும் மறுக்குது''

''மழை தூவி உன்னை குளிர்விக்க
மேகமும் நினைக்குது''

''பூமியிலே நீ சுவாசிக்கும் காற்றாய்
என் மனம் உன்னை சுற்றி வருகுது''

என்னவளே!!!!

## - ஆனந்த் ரெய்னா

# ஏசி கொஞ்சம் யோசி




செந்தில் பக்கிரிசாமி
மன்னை

கோடை வெயில் கொடூரமாக கொளுத்தி கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், கோடையை தணிக்கும் விதத்தில் குளுமையான ஒரு விஷயத்தை பற்றி இங்கு பார்க்கலாம்.

குளிர் சாதனம் (AIR CONDITIONING)

நம் பிராந்தியத்தில் ஒரு வருடத்தில் மாறுபட்ட தட்பவெப்ப சூழ்நிலைகள் நிலவும். அதில் வெயிலின் தாக்கம் அதிகம் உள்ள கோடைக்காலம் என்பது ஏப்ரல் முதல் ஜூன் வரை இருக்கும்.

முன்பு எல்லாம் கோடை வெயில் என்னும் போது வெப்பநிலை அதிகபட்சம் 38° செல்சியஸ் இருக்கும். (இனி இந்த கட்டுரையில் குறிப்பிடும் அனைத்து வெப்பநிலையும் செல்சியஸ் என கருதுக).




ஆனால் கடந்த 10 வருடங்களாக வெப்பநிலையானது, வருடா வருடம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறி, தற்போது 42ஓ வரை சென்றுள்ளது. இது அரபு நாடுகளில் உள்ள வெப்பநிலை. ஆனால் இங்கே தமிழ்நாட்டில் இயற்கை சீரழிவின் காரணமாக இந்த அளவு உக்கிரமான வெப்பம் நம்மை தாக்குகிறது. இந்த கடும் வெப்பம் காரணமாக இன்று பல நடுத்தர குடும்பங்கள் கூட குளிர் சாதனம் பயன்படுத்த தொடங்கி விட்டனர்.

இந்த குளிர் சாதனம் எப்படி இயங்குகிறது என்பதை பற்றி இந்தப் பதிவில் பார்க்கலாம்.

குளிர்சாதனம் இயங்கும் கோட்பாடு. (air & conditioning principal)
ஒரு பொருளை செயற்கையாக வெப்பப்படுத்த வேண்டும் எனில், அந்த பொருள் மீது வெப்ப ஆற்றலை கடத்த வேண்டும். அந்த வெப்ப ஆற்றல் எரிபொருள் மூலம் கொடுக்க முடியும். அல்லது மின்னாற்றல் மூலம் கொடுக்க முடியும்.

மின்னாற்றலை வெப்ப ஆற்றலாக மாற்றிக்கொள்ளும் தனிமங்களை பயன்படுத்தி செய்து

கொள்ளலாம். உதாரணம் நம் வீடுகளில் குளிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஹீட்டர் (heater). இதில் பயன்படுத்தப்படும் தனிமங்கள் (Heating element) நிக்கல், குரோமியம் போன்ற தனிமங்களின் கலவை. இவை சிறந்த மின் கடத்தா தனிமங்களின் கலவை. எனவே அதிக எதிர்ப்பு வெப்பத்தை உருவாக்கும். இப்படித்தான் மின் ஆற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றப்படுகிறது. அந்த வெப்பம் நீருக்கு கடத்தப்படுகிறது.இதன் மூலம் நமக்கு வெப்பநீர் கிடைக்கிறது, மிக எளிய முறை.

ஆனால் ஒரு பொருளை செயற்கை முறையில் குளிர்விப்பதென்பது வெப்பப்படுத்தல் போன்று அவ்வளவு எளிய முறை இல்லை. அப்படி ஒரு தன்மையை எந்த தனிமமும் கொண்டு இருக்கவில்லை. எனவே சில அறிவியல் கோட்பாடுகள் மூலம் இந்த செயல் நடைபெறுகிறது.

கோட்பாடு 1
''ஒரு பொருளின் அழுத்தம் (pressure) அதிகமாகும் போது வெப்பநிலை (temperature) அதிகமாகும். அதே போல் அழுத்தம் விடுவிக்கப்படும் (pressure release) போது வெப்பநிலை குறையும்.''

கோட்பாடு 2
அதே நேரத்தில் ''ஒரு பொருளின் வெப்பநிலை மாற்றம், பொருளின் அழுத்தத்தில் எந்த மாறுதலையும் ஏற்படுத்தாது''
இந்த இரண்டு அறிவியல் கோட்பாடுகளின் படி குளிர்சாதன தொழில்நுட்பம் இயங்குகிறது.

குளிர்சாதனம் இயங்கும் சுழற்சி முறை (air & condtioning cycle)

பின்வரும் நான்கு நிலைகளில் குளிர்சாதனம் செயல்படுகிறது.


1. Compression (அழுத்தம் கொடுத்தல்)
2. Condensation (வெப்பம் தணித்தல்)
3. Expansion (அழுத்தம் விடுவித்தல்)
4. Heat exchange ( வெப்ப கடத்தல்)

1. Compression (அழுத்தம் கொடுத்தல்)

ஒரு பொருளை அழுத்தும் போது அதன் அழுத்தமும், வெப்ப நிலையும் உயரும். இந்த அடிப்படையில் ஒரு refrigerant fluid (குளிர் சாதன நீர்மம்)
ஒரு compressorக்குள் மிக அதிக வேகத்தில் அழுத்தப்படுகிறது.
அப்படி செய்யும் போது அந்த நீர்மத்தின் அழுத்தம் மற்றும் வெப்பம் உயர்கிறது.

(இந்த இடத்தில் நாம் சில தகவல்களை அவசியம் அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த நீர்மம் என்பது முன்பு freyon மற்றும் CFC என்னும் குளோரோ புளோரோ கார்பன் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் COMPRESSION மூலம் ஏற்படும் அழுத்தம் காரணமாக கசியும் வாயுக்கள் சுற்றுப்புறத்தை மாசுபடுத்தும் காரணத்தால் குறிப்பாக ஓசோன் மண்டலத்தை பாதிக்கும் காரணத்தால் தற்போது இவை பயன்படுத்தப்படுவதில்லை. அதற்கு பதிலாக குறைவான பாதிப்பை ஏற்படுத்தும் குளிர்சாதன நீர்மங்கள் பயன்படுத்தப்படுகின்றன. R122, R130 போன்ற பல வாயுக்களின் கலவை பயன்படுத்தப்படுகிறது இப்போது. மேலும் வளர்ந்த நாடுகளில் இந்த கசிவு அளவு கண்காணிக்கப்படுகிறது பெரிய அளவில் பயன்படும் acக்களில்.




அதே போல் Compressor என்னும் போது வாகனத்தில் உள்ளது போல் ஒரு பிஸ்டன் மூலம் நீர்மத்தை நசுக்குவது அல்ல. ஒரு மைய விசை விசிறியின் மூலம் (centrifugal fan) அதி வேகத்தில் குளிர்சாதன நீர்மம் தள்ளப்படுகிறது.)

இதை இன்னும் சுலபமாக விளக்க வேண்டுமென்றால், ஒரு குளிர் சாதன நீர்மத்தின் ஆரம்ப நிலை வெப்பம் 30 டிகிரி. அழுத்தம் 30psi என வைத்து கொள்வோம்.

அழுத்தம் கொடுத்த பின் தற்போது அந்த நீர்மம் வாயு நிலைக்கு சென்றுவிடும். வெப்பநிலை 160degree மற்றும் அழுத்தம் 150psi என வைத்து கொள்வோம்.

அதாவது 130 டிகிரி வெப்பமும், 120 psi அழுத்தமும் ஏறி உள்ளது.

2. Condensation (சூடு தணித்தல்)
Compressorல் இருந்து அதிக அழுத்தம் மற்றும் வெப்பத்தோடு வரும் refrigererant gas அடுத்து condenser எனப்படும் பகுதிக்கு வருகிறது.
இது வீட்டில் ஒரு சூடான கஞ்சியை எப்படி ஆற வைப்போமே அப்படிதான். ஒன்று விசிறி விடுவோம், இல்லையென்றால் நீரில் வைப்போம். அதே முறை தான் இங்கு. விசிறி வைத்து தணிப்பது air cool condenser, தண்ணீர் வைத்து தணிப்பது water cool condenser.

ஆனால் நம் வீடுகளில் பயன்படுத்தப்படும் acகளில் air coolதான். Ac unit உள்ள ஒவ்வொரு வீடுகளின் அறைக்கு பின்னே ஒரு பெட்டி இருக்கும் அதில் ஒரு fan ஓடிக்கொண்டு இருக்கும். அதில் இருந்து சூடான காற்று வருவதை பார்த்து இருப்பீர்கள். பலர் அது அறையில் உள்ள சூடான காற்றை வெளியேற்றுகிறது என நினைத்து கொண்டு இருப்பீர்கள், அது அல்ல. அந்த பெட்டிக்குள் தான் Compressor மற்றும் condenser unit இருக்கும். அந்த fan சுற்றும் போது condensing (தணிக்கும்) வேலை நடைபெறுகிறது எனப் பொருள்.

Condenserல் குறுகிய சுருள் செப்புக்குழாய்களில் வழியாக வரும். அந்த அழுத்தம், வெப்பம் மிகுந்த வாயு விசிறி மூலம் வெப்பம் சற்று தணிக்கப்படுகிறது.
உதாரணமாக 160°ல் இருந்து 140° என ஒரு 20° குறைந்து இருக்கிறது என வைத்து கொள்வோம். ஆனால் அழுத்தம் குறையாது அப்படியே இருக்கும். நாம் முன்பே பார்த்த அறிவியல் கோட்பாடுபடி வெப்பம் குறையும் போது அழுத்தம் குறையாது என.

3. Expansion (அழுத்தம் விடுவித்தல்)
ஒரு மிக நெரிசலான குறுகிய பாதையில், ஒரு சிறிய கதவு மூலம் ஒரு பெரும் கூட்டம் கடக்கும் போது பெரிய நெருக்கடி இருக்கும். ஆனால் அந்த கதவை தாண்டி ஒரு பெரிய திடலுக்கு செல்லும் போது மொத்த நெருக்கடியும் விலகி ஒரு சுதந்திரமான நிலையை உணர முடியும். அதே முறைதான் இங்கும்.


இதுவரை அதிக அழுத்தத்துடன் குறுகிய பாதை வழியாக பயணித்து வந்த குளிர் சாதன வாயு திடீர் என ஒரு பெரிய பாதைக்குள் அனுப்பப்படும். அதுதாம் expansion valve. அதாவது venturi எனவும் சொல்லலாம்.
ஒரு புனல் போல அமைப்பை எடுத்து கொள்ளுங்கள். இப்படி செய்வதன் மூலம் அழுத்தம் விடுவிக்கப்படுகிறது. எனவே 150psiல இருக்கும் வாயு மீண்டும் பழையபடி 30psiக்கு வருகிறது. அழுத்தம் குறைந்தால் வெப்பநிலை குறையும் என்ற கோட்பாட்டின் படி ஆரம்பத்தில் 130° ஏறிய வெப்பம் இப்போது அப்படியே குறைகிறது. ஆனால் condenser மூலம் நாம் ஏற்கனவே 20K குறைத்து உள்ளோம். எனவே 140°ல் இருந்து 130° கழிந்து

இப்போது $10^{\circ}$ல வந்து நிற்கும்.

இப்படித்தான் $30^{\circ}$ல் இருந்து $10^{\circ}$க்கு ஒரு நீர்மம் மாறி வந்து உள்ளது.

4. Heat exchange (வெப்ப கடத்தல்)

இப்படியாக $10^{\circ}$க்கு குறைந்த மிக குளிர்ச்சியான குளிர்சாதன நீர்மம் அடுத்து heat




exchangerக்கு வருகிறது. இதுவும் Condenser unit போல தான். செப்பு சுருள்களில் வழியாக செல்லும் அந்த குளிர்ந்த நீர்மத்தின் உள்ள குளிர்ச்சியை ஒரு விசிறி மூலம் அறைக்குள் அனுப்புகிறது. இதன் மூலம் அறை குளிர்கிறது. எனவே அறைக்கு உள் இருக்கும் ac பெட்டி தான் heat exchanger. அறைக்கு வெளியே இருக்கும் பெட்டி என்பது compressor மற்றும் condenser unit உள்ளவை.

Heat exchanger வழியாக செல்லும் refrigerent fluid மீண்டும் compressorUS $30^{\circ}$யில் செல்லும். $10^{\circ}$யில் இருந்த அதன் குளிர்ச்சி அறைக்குள் கடத்தப்பட்ட காரணத்தால் மீண்டும் வெப்பநிலை ஏறி பழைய மாதிரி சென்றுவிடும். மீண்டும் இந்த சுழற்சி முறை தொடர்ந்து நடைபெறும்.

இப்படித்தான் இந்த AC இயங்குகிறது.

இதில் சில சந்தேகங்கள் எழலாம்.தொடர்ந்து அறைக்குள் குளிர்ந்த காற்று வந்த கொண்டே இருந்தால் அதிக குளிர் ஏற்படுமே என்று.

அதற்குத்தான் அறை வெப்பநிலையை நிலையாக தீர்மானிக்க TEMPERATURE set point உங்கள் remoteல் இருக்கும். உதாரணமாக, $23^{\circ}$ நீங்கள் set செய்யும் போது, அறையின் வெப்பம் $23^{\circ}$ல இருக்க வேண்டும் என்று பொருள். எனவே தொடர்ந்து குளிர்ந்த காற்று உங்கள் அறைக்குள் வந்து கொண்டே இருக்கும். அதே நேரத்தில் உங்கள் அறையின் வெப்பநிலையை உணரும் ஒரு temperatue sensor அறைக்குள் உள்ள heat exchanger unitல் இருக்கும். அது அறை வெப்பம் $23^{\circ}$யை உணர்ந்தவுடன் உடனே compressorக்கு சமிக்ஞை (சிக்னல்) கொடுக்கும். உடனே compressor தன் பணியை நிறுத்தி கொள்ளும். எனவே குளிர்ச்சியான காற்று வராது. ஆனால் அறைக்கு உள்ளே உள்ள விசிறி தொடர்ந்து இயங்கும்.

மீண்டும் அறை வெப்பம் உயர தொடங்கும். $23^{\circ}$ யை தாண்டி $1^{\circ}$அதிகம் செல்லும் போது, அந்த temperature sensor $24^{\circ}$யை உணரும் போது மீண்டும் compressorக்கு சமிக்கை கொடுத்து இயங்கச் செய்யும். இது ஒரு சுழற்சி.

கட்டிலில் ஓரத்திற்கு செல்லும் குழந்தையை இழுத்து கட்டிலின் நடுவில் படுக்க வைப்பது போலத்தான். அது மீண்டும் ஓரம் செல்லும் போது மீண்டும் இழுத்து விடுவது போலத்தான்.

இன்னும் பல தகவல்கள் இருக்கு. Invereter acயில் எப்படி மின்சாரம் குறைகிறது, 1 டன் ac என்பது என்ன??

சாதாரணமாக ஒரு 200 சதுர அடி அறையை குளிர்விக்க எத்தனை டன் ச்ஞி வேண்டும்,

1 டன் ac எவ்ளோ யூனிட் மின்சாரம் எடுக்கும், என பல விஷயங்கள் உள்ளன. அவையனைத்தையும் இந்த ஒரே பதிவில் எழுத வேண்டாம். திகட்டும், எனவே சந்தேகம் உள்ளவர்கள் இந்த கட்டுரையை படித்து முடித்து பின் கேள்விகளாக கேளுங்கள். உங்கள் சந்தேகங்களுக்கு என்னால் முடிந்த வரை பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பு:
இந்த தகவல்கள் அனைத்தும் நான் அனுபவப்பூர்வமாக உணர்ந்து, என் சொந்த கருத்தில் எழுதப்பட்டவை. எந்த புத்தகங்கள் மற்றும் இணையத்தில் இருந்து எடுக்கப்படவில்லை.

**- மன்னை செந்தில் பக்கிரிசாமி**

# முக்குக்கடை



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

சொக்கா, இது தொழில் இல்ல. இதை தொழிலா நெனச்சு பண்ணக்கூடாது .நாமளும் வாழ்ந்து, வரவங்களுக்கும் வயிறும் மனசும் நெறய வைக்கணும். நாம நமக்கான புண்ணியத்தை சேத்துக்குறோம். இதை காசு சம்பாரிக்கிற தொழிலுனு மட்டும் நெனச்சிடாத.
கல்யாணம் முடிச்சிட்டு இங்க வருவாங்க, கருமாதி முடிச்சிட்டு வருவாங்க, சந்தோசமா வருவாங்க, துக்கமா வருவாங்க இப்படி விதவிதமான மனநிலையோட வருவாங்க, உக்காந்து ஒருவாய் சாப்பாடு எடுத்து வாயில வச்சதும் அவங்களோட மனசு சாப்பாட்டுக்குள்ள வந்துடனும்.

மனுஷன் உயிரோட இருக்குறதுக்கு ரெண்டு தான் முக்கியம். ஒன்னு தூக்கம் இன்னொன்னு சாப்பாடு. யாராலயும் தூக்கத்த தரமுடியாது ஆனா நம்மால சாப்பாட்ட தர முடியும். சந்தோசமா வந்து சாப்பிடுறவங்க இன்னும் சந்தோசமா வெளில போகணும். மனக்கஷ்டத்துள்ள வந்து சாப்பிடுறவங்களோட கஷ்டம் நம்ம சாப்பாட்டோட சேந்து செரிச்சு போயிடனும். இது ஒரு கலை, தொழில் இல்ல.

ஏங்க இப்ப எதுக்கு இவன்ட்ட இதெல்லாம் சொல்லிட்டு இருக்கீங்க.
இல்லடி இன்னைலேந்து இவன் கடைய பாத்துக்கட்டும்.
ஏங்க அதான் நீங்க இருக்கீங்கள, போய் உக்காந்து பாத்துக்கோங்க.
அதெல்லாம் ஒன்னும் வேண்டாமுடி. இவ்ளோ நாள் என்கூட வந்து இவன் எல்லாம் பாத்துட்டுருக்கான். இனி தனியா பாத்துக்கட்டும்.

யப்பா நான் பாத்துக்குறேன். நீங்களும் வாங்க, என்ன பண்ணபோறீங்க வீட்ல உக்காந்து. சொக்கா, தெனம் நான் வர தேவையில்லை. அதுவும் இல்லாம உன் வாழ்நாள் முழுக்க நான் உன்கூட வரமுடியுமா. நீயே பாத்துக்கோ .தாத்தா பேரை நான் காப்பாத்திட்டேன். என் பேரை நீ காப்பாத்திடு.

கண்டிப்பாப்பா உங்க பேர காப்பாத்திடுவேன்ப்பா.
நல்லதுய்யா. நீ கிளம்பு. சொக்கா அப்பறம், இப்ப நான் சொன்னதெல்லாம் நான் ஏதோ புதுசா உனக்கு சொன்னது இல்ல. தாத்தா என்கிட்டே சொன்னது .அதைத்தான் நான் உன்கிட்ட சொல்றேன்.

சொக்கா அப்பறம் எக்காரணத்தை கொண்டும் கடை நடத்துறதுக்கு எந்த இடைஞ்சலும் வந்துடக்கூடாதுப்பா. அது என் தாத்தா,அப்பா, நான்னு காலம்காலமா உருவாக்குனதுடா. நம்ம கோயில்.

தாத்தா வியாபார விஷயமா வடலூர் போனப்ப அங்க வள்ளலாரோட தர்மசாலையை பார்த்து அதே மாதிரி நம்மூரிலும் ஆரம்பிக்கணும், எல்லோருக்கும் பசியாற சாப்பாடு போடணும்னு

முடிவு பண்ணி ஊருக்கு வந்ததும் இந்த ஹோட்டலை ஆரம்பிச்சிருப்பா. அவர்ட்ட காசு இருந்தா கண்டிப்பா இலவசமாவே கொடுத்திருப்பார். என்ன பண்றது என் வரையில் கூட அத செய்யமுடியல ஆனா யார் மனசும் குறைபடாம வயிறார நிறைவா எல்லோருக்கும் சாப்பாடு போட்டிருக்கோம். பஞ்சகாலத்திலேயும் புயல் காலத்திலேயும் கூட நாம சாப்பாடு போட்டுருக்கோம்டா.

குமரன் அவன் காலத்துல இந்த ஹோட்டலை பாத்துக்குறானோ இல்லையோ எனக்கு தெரியாது நான் சாவுறது வரையில் அது நல்லபடியா நடக்கணும் அவ்வளவு தான். சரிப்பா. நீங்க நிம்மதியா இருங்க நான் பாத்துக்கிறேன்.

எனக்கென்னடா என் பேரன் குமரன் இருக்கான், அவன்கூட என் காலத்தை ஓட்டிடுவேன். சரிப்பா நான் கிளம்புறேன். யம்மா வரேன். யமுனா வரேண்டி.
சரிங்க. சாப்பிட ஒரு எட்டு வந்துட்டு போஙக.

சரிடி வந்துடுறேன்.

என்ன தம்பி எங்க தொரையை காணும்.

இல்லண்ணே அப்பா இனி வரலன்னுட்டார். என்னையே பாத்துக்கசொல்லிட்டார். அபப்டியா சந்தோசம் தம்பி. அதான் நேத்து மருவி மருவி ஹோட்டலையே சுத்தி சுத்தி வந்தானா. என்கிட்டே கூட சொல்லலையே அவன். வரட்டும் வச்சிக்கிறேன். காலைல மார்க்கெட்போய் மீனெல்லாம் வாங்கிட்டு வந்து கொடுத்துருக்கான் அப்ப கூட யார்ட்டயும் சொல்லலையே. 40 வருசமா ஒண்ணா இந்த கடையிலேயே இருந்துட்டேன். என்னாலயும் அவன் இல்லாம இருக்க முடியுமான்னு தெரியல. அவனுக்கும் இருப்பு கொள்ளாது . இந்த கடைல தான் வளந்தான், முதலாளி மகன் மாதிரி இல்லாம எல்லா வேலையையும் அவனே செஞ்சி ஒரு கட்டத்துல பெரியவருக்கு அப்பறம் கல்லால உக்காந்தான். புண்ணியம் தம்பி இதெல்லாம்.

ஆமாண்ணா அப்பாவும் அது தான் சொன்னார். அமுதன்னே இனி நீங்களே கல்லால உக்காந்துக்கோங்க நான் கடைய பாத்துக்குறேன்.
தம்பி நானா, அது தொர உக்காந்த இடம். தொரைக்கு அப்பறம் நீங்க தான் உக்காரனும். நான் எப்படி?. நீங்க தான் உட்க்காரனும்.

அண்ணே அதெல்லாம் ஒண்ணுமில்ல. நீங்க தான் அப்பாகூட 40 வருசத்துக்கு மேல இருந்துருக்கீங்க. நீங்க உக்காருங்க. நான் கடைய பாத்துக்குறேன்.
எனக்கு என்னவோ போல இருக்கு தம்பி. நான் வேணா அப்பாவ ஒருவார்த்தை கேக்கட்டுமா. அதெல்லாம் வேணாம்ணே. நான் தான் சொல்றேன்ல. நீங்க உக்காருங்க. சரி தம்பி.

வாடா அமுது எங்கடா ஹோட்டல்ல இல்லாம இங்க வந்துருக்கியே. பாக்கியம் யாரு வந்துருக்கா பாரு. வாங்கண்ணே எப்படி இருக்கீங்க. எங்க இந்தப்பக்கமே காணும்.

தெனம் உன் புருசனை பாத்துடுவேன் அதான் இங்க வர வாய்ப்பில்லாம போயிட்டு. இன்னைக்கு இவன் என்கிட்டே கூட சொல்லாம தம்பிட்ட கடைய கொடுத்துட்டான். ஹா ஹா அதெல்லாம் இல்லடா அமுது. ஒரு வாரமாவே ஏதோ யோசனையாவே இருந்தது. நேத்தும் மனசு அடிச்சிக்கிட்டு. காலைல மார்கெட்லேந்து வரும்போது முடிவு பண்ணிட்டேன். சொக்கும் எல்லாத்தையும் தெரிஞ்சிகிட்டான். இனி அவன்ட தனியா பாத்துக்கசொல்றது தான் சரினு பட்டது.

சரிடா நீ சொன்னா சரியா தான் இருக்கும். தொரை நான் வந்ததே ஒரு முக்கியமான விஷயம் சொல்ல தாண்டா. காலைல தம்பி வந்து நீ இனி வரமாட்டேன்னு சொல்லிட்டு என்னய கல்லால உக்கார சொல்லிட்டுடா. நான் எவ்வளவோ சொல்லி பார்த்தேன் கேக்கல. என்னாலயும் அதுக்கு மேல மறுத்து பேச முடியல. கல்லால உக்காந்துட்டேன்.

அதேமாதிரி தம்பி மூலைல ஒரு நாற்காலி போட்டு உக்காந்து எல்லோரையுமே பாத்துட்டு இருந்துது, யாருக்கும் ஒன்னும் புரியல. இப்ப சாப்பிட வந்தப்ப தான் என்ன தம்பி ஏன் அங்க உக்காந்துருக்கீங்கனு கேட்டேன். அதுக்கு அது ஒரு பதில் சொல்லுச்சு பாரு, ‘‘அண்ணே சாப்பாடு நாக்குல பட்டதுமே முகம் அத காட்டி கொடுத்துடும்ணே. அத பாக்க தான்னே அங்க உக்காந்தேன். யாரும் மொகம் சுழிச்சிகிட்டு சாப்பிடுற மாதிரி இருந்துட கூடாதுன்னே’’. இப்படி சொன்னதுமே எனக்கு உன்ன வொடனே பாத்து இத சொல்லணும்னு தோணுச்சுடா. நேரா ஓடியாந்துட்டேன் பாக்கியம், யமுனா இங்க பாத்திங்களா எம்புள்ளைய. இனி நான் நிம்மதியா கண்ண மூடுவேன்.
ஏன்டா நல்ல சேதி சொன்னா இப்படி நாற சேதி சொல்றியே.

தெரியலடா தோணுச்சு சொன்னேன். நிம்மதியா இருக்குடா. சொக்கு எல்லாத்துலயும் சரியா இருக்கிறான். குமரன் விசயத்துல மட்டும் அகலக்கால் வைக்கிறான். அதுவும் இந்த ஸ்கூல் பீஸ் இருக்கே. யப்பா. எவ்வளவு செலவு இந்த இங்கிலீஷ் ஸ்கூலுக்கு. எங்க கடன்ல மட்டிப்பானோன்னு பயமா இருக்கு.

அதெல்லாம் ஒன்னும் இல்லடா. எல்லா வீட்லயும் இதான் நடக்குது. நாம தான் இருக்கோமே. விட்டுடுவோமா. நீ குழப்பிக்காம சந்தோசமா இரு. சரிடா நான் ஹோட்டலுக்கு போறேன். மணியாவுது.
இரு சாப்பிட்டுட்டு போலாம்.

சொக்கா, மதியம் நீ சாப்பிட்டு போனதும் அமுது வந்தாண்டா. வந்து காலைலேந்து நடந்தத சொன்னான். ரொம்ப சந்தோசம்ப்பா. அவனையும் நல்லா பாத்துக்கோ. சம்பளத்துக்கு வேலைபாக்குறோம்ங்கற நெனப்பு அவனுக்கு வந்துட கூடாது. 40 வருசமா நமக்காக உழைக்கிறான்.

சரிப்பா நான் பாத்துக்குறேன். நான் போய் படுக்கிறேன் காலைல வெள்ளனே மார்க்கெட்டுக்கு போகணும்.
சரி நீ போய் தூங்கு.

வாங்கண்ணே என்ன இன்னைக்கு அப்பா மாதிரி வேட்டி சட்டைல வந்துருக்கீங்க. அப்பா வரலையா.

இல்ல ராபர்ட்டு இனி நான் தான் வருவேன். அப்பா என்னய பாத்துக்க சொல்லிட்டார்.
சரிண்ணே எப்பொழுதும் போல அசல போடவா இல்லா அட்டு வேணுமா.
என்ன ராபர்ட்டு புது கேள்வி நம்மள்ட்ட. எப்பொழுதும் போல தான் இனியும், நீ அசல போடு.

சரிண்ணே.

எங்க ராபர்ட்டு அப்பா இல்லயா.

இங்க தானே கடலுக்கு போயிருக்கு. வர நேரம் தான். இதோ வந்துட்டு.

வாப்பா சொக்கா கேள்வி பட்டேன்ப்பா. நீ தான் இனி பாத்துக்க போரியாமுள.
ஆமாண்ணே. உங்களுக்கு தெரியாம இங்குன என்ன நடந்துட போகுது.
ரொம்ப சந்தோசம்ப்பா. தாத்தா அப்பா மாதிரி நல்ல வியாபாரம் பண்ணுப்பா. ஊருலயே நீங்க ஒருத்தவங்க தான் நல்ல சரக்க போட்டு ஹோட்டல் நடத்துறீங்க. மத்தவனுங்க அட்டு போடுறதுமில்லாம எங்களையும் விக்க வச்சிடுறானுவோ. உங்களுக்கு அசல வித்து தான் நான் கொஞ்ச நிம்மதியாருக்கேன். இந்த மீனை கொண்டு போய் அம்மாட்ட கொடு சொக்கா.

வேணாம்ணே எதுக்கு இதெல்லாம். இல்லப்பா நான் கொடுத்தேன்னு கொடு. அப்பாவை அப்பப்ப வரச்சொல்லு இங்க.

சரிண்ணே நான் வரேன். ராபர்ட் வரேன்.

யம்மா இந்தா மீனு.

ஏண்டா இதை எதுக்கு இன்னைக்கு வாங்கியாந்தா.
இல்லமா சூசைன்னே கொடுத்தது. நான் வேணாமுன்ன கேக்கல. காசும் வாங்கிக்கலை. நான் வேற நல்லா பேரம் பேசி வாங்கிப்புட்டேன். இது மாதிரி கொடுப்பார்னு தெரிஞ்சிருந்தா அவ்வளவு அடிச்சு வாங்கியிருக்க மாட்டேன்.
சொக்கா, எல்லாத்துக்கும் பேரம் பேசுடா. பேசணும். ஆனா அடிச்சி பேசி வாங்க கூடாது. உனக்கு பொருள் வெல தெரியும். அவனுக்கு என்ன கட்டுப்படியாகுமோ அதுக்கு தகுந்த மாதிரி பேரம் பேசு. நமக்கு மட்டும் காசு குறைவா கொடுக்கணும்னு அடிச்சி பேசாத. பேரத்துலயும் ஒரு நியாயம் வேணும். அவனும் வாழனும் நாமும் வாழனும். அது தான் வியாபாரம்.

சரிப்பா நான் இனி பாத்துக்குறேன்.
ஏண்டி பய நல்லபடியா மீனு வாங்கிருக்காண்டி. அதான் சூசை வீட்டுக்கு மீனு

கொடுத்துருக்கான். இல்லேன்னா அவன் இருக்குறத புடிங்கிட்டுல எல்லாரையும் அனுப்புவான். அவனை ஒரு எட்டு போய் நான் பார்த்துட்டு வரேன். எம்புள்ள எப்படி இன்னைக்கு யாவாரம் பண்ணுனானு தெரிஞ்சுக்கணும். சொக்கண்ட்ட சொல்லிடாதடி நான் சூசைய பாக்க போறேன்னு.

சரி சரி போயிட்டு வெரசா வாங்க.
யப்பா 10த் ரிசல்ட் வந்துட்டுப்பா. குமரன் 500க்கு 480 எடுத்துருக்கான். அபப்டியா நல்ல மார்க்குடா. கெட்டிக்காரன்டா அவன். எங்க போனான் ஆளையே காணுமே. ஸ்கூலுக்கு போயிருக்கன்ப்பா ரிசல்ட் பாக்க.
யம்மா யமுனா ஏதாவது இனிப்பு செய்யேன் புள்ளைக்கு.
இதோ செய்றேன் மாமா.

டாடி, நான் 450க்கு மேல எடுத்தா நான் கேக்குறத வாங்கி தரேன்னு சொன்னீங்கள.
ஆமாடா என்ன வேணும் கேளு வாங்கி தாரேன்.
டாடி எனக்கு பைக் வாங்கித்தாங்க.
உனக்கு எதுக்குடா இந்த வயசுல பைக்.

என் பிரெண்ட்ஸ் எல்லாம் பைக் வச்சிருக்காங்க என்கிட்டே தான் இல்லை.
அவங்க வச்சிருக்காங்கன்னுல்லாம் நாம வாங்க கூடாதுடா. நமக்கு என்ன தேவையோ அதை பொறுத்து தான் வாங்கணும்.
அப்படினா எனக்கு பைக் தேவை. வாங்கி தாங்க. நீங்க தான் ப்ராமிஸ் பண்ணுனீங்க.
சரி போய் அம்மாட்ட ஸ்வீட் இருக்கு வாங்கிக்க. நான் என்னனு சொல்றேன்.
என்னன்னுல்லாம் சொல்லாதீங்க வாங்கி தாங்க. நான் நாளைக்கு என்ன பைக் மாடல்னு பாத்துட்டு சொல்றேன்.

உனக்கு என்னடா தெரியும்.
அதெல்லாம் எனக்கு தெரியும். நான் சொல்றேன். நீங்க வாங்கி தாங்க.
சொக்கா பாத்தியா. என்ன கேக்குறானு. அவன் என்ன பண்ணுவான் சின்ன பையன். அவனை சுத்தி யாரு இருக்காங்களோ என்ன நடக்குதோ அப்படி தானே அவன் இருப்பான் கேப்பான். நாம தானே இதெல்லாம் முன்கூட்டியே புரிஞ்சிக்கணும்.
அதெல்லாம் ஒண்ணுமில்லப்பா. எப்படி இருந்தாலும் ஒரு பைக் வீட்ல இருக்குறது நல்லது தானே. ஆத்ர அவசரத்துக்கு உதவும் தானே. வாங்கிக்கலாம்ப்பா.
பணம் அவ்ளோ கைல இருக்காடா. இல்லப்பா. வண்டிக்கு லோன் தராங்க. மாசாமாசம் கட்டிக்கலாம்.

சரிப்பா பாத்துக்க. கடன்ல ஏதும் மாட்டிக்கதா.
பாக்கியம் நான் பயப்பட்ட மாதிரி தான் நடக்குதுடி. என்ன குமரன் விசயத்த தவிர எல்லாத்தையும் ரொம்ப சரியா பண்றான். தொழில் அவ்வளவு சுத்தமா இருக்குனு எல்லாம் சொல்றாங்க. அந்தவகையிலே ரொம்ப சந்தோஷம்டி. கடன்ல மாட்டிக்காம இருக்கணும்.
என்னங்க பண்றது உலகம் அபப்டி தான் இருக்கு. நம்மள மாதிரியே இந்தக்காலத்து புள்ளைக இருக்குமா. அவன் என்ஜினீயருக்கு படிக்கணும்னு சொல்லிட்டு இருக்கான்.

படிச்சு எங்காவது கம்பனிக்கு வேலைக்கு போகணுமாம்.

சொக்கு ஸ்கூலுலே பர்ஸ்ட் மார்க்கு எடுத்துட்டு வந்து என்னடா உனக்கு வேணும்னு கேட்டதுக்கு பரோட்டா வேணும்னு சொன்னாண்டி. நான் ஓடி போய் வாங்கியாந்தேன். அந்த காலம் எப்படி இருக்கு. இப்ப எப்படி இருக்கு பாரேன். அந்த பரோட்டா அன்னைக்கு அவனுக்கு அந்த நேரத்துல தேவைப்பட்டது. அதை சாப்பிட்டு சந்தோஷமாகிட்டான். நமக்கும் அது சந்தோசமா இருந்துச்சி. இப்ப என்னனா. என்ன சொல்றது போ. காலம் எங்கயோ போயிட்டு இருக்கு. எதுக்கு வாங்குறோம்னே தெரியாம எல்லாத்தையும் வாங்குறோம். அதுல ஏதாவது சந்தோசம் யாருக்காவது இருக்கா பாரு. இன்னொருத்தனை பாத்து நாம நம்மோட தேவையை முடிவு செய்ற மாதிரி ஆகிட்டு. இதுக்கு முடிவே இல்லடி. அவன் என்னங்க பண்ணுவான் சின்ன புள்ளத்தானே.

நான் அவனை சொல்லலைடி. சொக்கனை சொன்னேன்.
அதெல்லாம் அவன் பாத்துப்பான் நீங்க போட்டு மனச குழப்பிக்காதீங்க.
ஹ்ம்ம்

சொக்கா! சொக்கா!

என்னம்மா தூங்கலையா. என்ன நடுசாமத்துள.
சொக்கா, அமுதன்னே வந்துருக்கு ஏதோ கடைதெருல பிரச்சனையா இருக்காம். அப்பாவை எழுப்பவாடா.

அதெல்லாம் வேணாம்மா நீ போய் படு நான் போய் என்னனு பாத்துட்டு வரேன்.
அண்ணே என்னாச்சு என்ன பிரச்சனை.

சொக்கா சாமி சிலை ஒன்னு எடுத்துட்டு போறாங்கன்னு நம்ம கடையெல்லாம் வரிசையா இடிச்சி போட்டுட்டாங்கடா. எல்லா கடைக்காரவுகளும் அங்க நிக்குறாங்க. சாமி விசயம்ங்கறதால யாராலயும் ஏதும் செய்ய முடியாம நிக்குறாங்க.
அய்யயோ என்னண்ணே சொல்லறீங்க.

போலீஸ்காரங்க கூட்டமா நிக்குறாங்க.அதிகாரிங்க கட்சி காரங்க எல்லாம் வாராங்களாம் வா நாம வெரசா போவோம்.

எல்லாம் அமைதியா உக்காருங்க. இது இங்க மட்டும் நடக்கல. சாமி வந்தவாசிலேந்து பெங்களூருக்கு கொண்டுபோறாங்க. சுமார் 350 கிலோ மீட்டர் தூரத்துக்கு இப்படி தான் வீடு கடைனு கண்ணுல பட்டத்தை இடிச்சிட்டு போயிட்டு இருக்காங்க. ரெண்டு கவெர்மென்ட்டும் ஃபுல் சப்போர்ட். யாரும் ஒன்னும் பண்ண முடியாது. அதுவில்லாம இது பிதிஷ்ட்டை பண்ணின சாமி சிலை. முழு சக்தியோட போயிட்டு இருக்கு. அதனை நம்மால தடுக்க முடியாது.

அரசு எல்லோருக்கும் நிவாரணம் தரும். நீங்க மீண்டும் அங்கேயே இடிஞ்சத கட்டிக்கலாம்.

கடைவீதில மட்டும் ரோடு பெருசாக்க போறாங்க, ஏற்கனவே பலவாட்டி முயற்சி பண்ணி முடியல. இப்ப அரசு அதை அங்க பண்ண போகுது. அதனால அங்க இப்ப இருக்குற அளவுக்குள்ள ஏதாவது பண்ணிக்கோங்க. பழையபடி ரோட்டுப்பக்கம் இழுத்து கட்ட முடியாது.

ஏம்ப்பா சத்தம் போடுறீங்க. சத்தம் போட்டீங்க அப்படியே தூக்கி கொண்டு போய் செல்லுல போட்டுடுவேன். சத்தம் போடாம நான் சொல்றத கேளுங்க. உங்களுக்காக தான் நான் இந்நேரம் வந்து பேசிட்டு இருக்கேன். இல்லேன்னா இதை எப்படி டீல் பண்ணனும்னு எனக்கு தெரியும். உக்காருங்க மொதல்ல.

கடைவீதில இப்ப இருக்குற இடத்துல என்ன பண்ணமுடியுமோ அங்க நீங்க உங்க வியாபாரத்தை பண்ணிக்கோங்க. முடியாதவங்களுக்கு ஏற்கனவே கட்டி போட்ட நகராட்சி கட்டடம் இருக்கு. அங்க இடம் ஒதுக்கி தருவாங்க. அங்க உங்க கடையை வச்சிக்கோங்க. உங்களுக்கு உங்க இடத்துக்கான காசும் இடிச்சதுக்கு இழப்பீடும் அரசு தந்துடும். இன்னொன்னும் சொல்றேன். இங்க ரெண்டு விசயம் தான் ரொம்ப பெருசு ஒன்னு சாமி இன்னொன்னு அரசு. இது ரெண்டுத்தையும் எதிர்த்துக்கிட்டு உங்களால வாழ முடியுமான்னு யோசிச்சுக்கோங்க. மத்த ஊர்ல சிலபேரு கேசு போட்டுருக்காங்க. அது எத்தனை வருஷம் நடக்க போகுது, அதுக்குள்ள கேசு போட்டவங்களாம் என்னவாக போறாங்கன்னு நீங்க பாக்க தான் போறீங்க. சூதனமா யோசிச்சு செயல்படுங்க. அவ்ளோ தான்
எல்லாம் இப்ப கிளம்புங்க. நாலைக்கு காலைல 10 மணிக்கு எல்லாம் ரிஜிஸ்டர் ஆபீஸ்க்கு வந்துடுங்க. லீகலா எல்லாம் பேசி பதிவு பண்ணிக்கலாம். ஸ்பெஷல் ஆஃபீஸ்ர்லாம் வேறவேற ஊர்லேந்து வந்து இந்த வேலையை உடனே முடிக்க போறாங்க.
இல்ல நான் வரமாட்டேன் என்னால ஆனதை பாத்துக்குறேனு நெனச்சா தாராளமா பண்ணுங்க. எங்களுக்கு எப்படி அதை பாத்துக்கணும்னு தெரியும். சரியா கிளம்புங்க எல்லாம். கூட்டம் போடக்கூடாது. அமைதியா போயிட்டே இருக்கணும். கிளம்புங்க கிளம்புங்க. வேகம்.

யோவ், எல்லா பக்கமும் போங்க. யாரும் கூட்டம் போட்டா களைய சொல்லுங்க. கேக்கலையா வண்டில ஏத்துங்க, ஓடிடுவாங்க. அத மீறி ஏதாவது பிரச்சனைன்னா என் லைனுக்கு வாங்க.

சரிய்யா, நாங்க பாத்துக்குறோம்.
பாத்துக்கிறேன்னு ஏதும் சொதப்பாம இருங்க. கொஞ்சம் பிசிறினாலும் நியூஸ் பெருசாயிடும்.

அதெல்லாம் விட மாட்டோம்ய்யா. நாங்க பாத்துக்குறோம். ஏதாவதுனா உடனே லைனுக்கு வரோம்.
சொக்கா வா கடைய போய் பார்த்துட்டு வந்து அப்பாட்ட என்ன பண்ணலாம்னு பேசுவோம். என்னண்ணே இப்படி செதஞ்சிட்டே.

முக்கு கடை சொக்கா அதான் ரெண்டுபக்கமும் அடி. எல்லோருக்கும் முன்ன மட்டும் தான்

ஆனா நமக்கு தான் இப்படி ஆகிட்டு.

படுபாவிங்க டேபிள் ஜாமான கூட எடுத்து வைக்காம அபப்டியே ஏத்திட்டு போயிருக்கனுங்களே.

சொன்னா நாம யாரும் விடமாட்டோம் அதான் சொக்கா. அவனுங்க அப்படி தான். நம்ம பாய் கடை முழுசா போயிட்டு. ஒன்னு இல்ல. ஆனா என்ன பண்றது அவரால வாய கூட தொறக்க முடியாது. தொறந்தா இந்து முஸ்லீம் பிரச்சனைன்னு சொல்லுவானுங்க. எல்லாம் ஒன்னு கூடி அவன் குடும்பம் சொந்த பந்தம் எல்லாத்தையும் செதச்சிடுவானுங்க. அவனுக்கு நாம பரவாயில்லை. அபப்டி தான் நெனச்சிக்கணும்.

இந்த இடத்துல இனி ஒன்னும் பண்ணமுடியாதுன்னே. அப்பாவை நெனச்சா தான் கஷ்ட்டமா இருக்கு. இதை அவரால ஏத்துக்கவே முடியாது. ஒடஞ்சிடுவாரு. என்ன பண்றதுனே தெரியலண்ணே. அவர்ட்ட போய் எப்படி சொல்றது இதை. இவனுங்க எவ்ளோ பணம் தருவானுங்க எப்ப தருவானுங்க. நான் என்ன பண்ண போறேன். குமரன் வேற இன்ஜினியரிங் படிக்கணும். மெட்றாஸ் போய் தான் படிப்பேன்னு என்னென்னமோ சொல்றான். நான் வேற கண்மூடி தனமா அவனை பெரிய ஸ்கூல்ல சேத்துப்புட்டேன். அதுக்கே இன்னும் கடன் அடைஞ்ச பாடில்லை. கடைல வேலைபாக்குறவங்கள்லாம் இருக்காங்க. அப்பா காலத்துலேந்து எல்லாம் கடைய நம்பியே வாழ்ந்துட்டு இருக்காங்க. சொக்கா வா என்ன பண்றது. நடந்துட்டு அடுத்து என்னனு தான் பாக்கணும். வா போய் அப்பாவை பாப்போம்.

நான் வரலன்னே. என்னால முடியாது. நீங்க போய் சொல்லுங்க.
சொக்கா, நீ தான் தைரியமா இருக்கணும். வா போலாம்.

இல்லண்ணே நான் வரல. அப்பா என்கிட்ட கடைய கொடுத்தப்பவே, ‘‘நான் கண் மூடுறதுக்குள்ள  இதை மூட மட்டும் வச்சிடாதடான்னு சொன்னார். இன்னைக்கு போய் எப்படி அவர்ட்ட இந்த செய்தியை சொல்றது.

சொக்கா, உன்ன நம்பி உன் குடும்பம், கடைல வேலைபாக்குறவங்க குடும்பம்னு எல்லாம் இருக்கு. நீயே இப்படி இருந்தா மத்தவங்க என்ன நெனப்பாங்க. வா போலாம். இன்னும் கொஞ்ச நேரத்துல கடையாளுக்களுக்கெல்லாம் விஷயம் தெரிஞ்சு வந்துடுவாங்க.

வாங்கண்ணே, சொக்கா என்னாச்சுடா.

இல்லமா பாக்கியம். கோதண்டராமரோடோ பெரிய சாமி சிலை ஒன்னு பெங்களூருக்கு எடுத்துட்டு போறாங்க. அது போகமுடியாத இடத்துல உள்ள வீடு கடைன்னு தட்டிட்டு போறாங்க. அப்படி நம்ம கடையும் கொஞ்சம் இடிஞ்சிட்டுமா.

கொஞ்சலாம் இல்லம்மா ரெண்டுபக்கம் போய்ட்டு. இனி ஒன்னும் பண்ணமுடியாது அங்க. நாம என்னடா கெடுதல் வச்சோம் அந்த பெருமாளுக்கு அவனே நம்ம கடைய நாசம்

பண்ணிட்டானே.

அம்மா, நகராட்சி கட்டடத்துல கடை வச்சிக்கிறதுனா இடம் ஒதுக்கி தரேன்னு சொல்லிருக்காங்க. இடிச்சதுக்கும் இடத்துக்கும் பணம் தரேன்னு சொல்லிருக்காங்க. ஆனா எவ்வளவு வரும் எப்ப வரும்னு சரியா தெரியாதுன்னு சொல்லிட்டாங்கமா. நாம காசுபோட்டு வேணா கடைய ஆரம்பிச்சிக்கலாமாம் இப்போதைக்கு.

சரி அதெல்லாம் அப்பறம் பாக்கலாம், பாக்கியம் தொரை எங்க. இன்னும் எந்திரிக்கலயா. ஆமாண்ணே, மாமா ரூம்ல போய் படுத்துகிட்டார். நீங்க ரெண்டு பேரும் போனதும் அந்த சத்தம் கேட்டு எந்திரிச்சிட்டார். என்ன கடைல பிரச்சனைன்னு கேட்டார். தெர்லங்க, பாக்க சொக்கும் அமுதன்னனும் போயிருக்காங்கனு சொன்னேன். சரின்னு சொல்லிட்டு மாமா ரூம்குள்ள போய்ட்டார். கேட்டதுக்கு மனசு ஏதோ ஒருமாதிரி இருக்குனு சொன்னார். நானும் அதெல்லாம் ஒண்ணுமில்ல சொக்கு பாத்துப்பான் நீங்க வந்து ஹால்ல படுங்கனு சொன்னேன். வேணாம் நான் கொஞ்ச நேரம் இங்க தூங்குறேன்னு சொல்லிட்டார். நானும் அதுக்குமேல கேட்டுக்கல. காலைல கேட்டுக்கலாம்னு இருந்துட்டேன்.

சரிம்மா நீ போய் எழுப்பிவிடு.

சொக்கா என்னடா இவன் நேத்து அங்க போய் படுத்துருக்கான். ஆச்சர்யமா இருக்கே. பெரியவரை கடைசியா அங்க உக்காத்தி  வச்சி தான் பாடைல ஏத்துனோம். அதுக்கப்புறம் அந்த ரூம் பக்கமே தலைவச்சி அவன் படுக்கலையேப்பா. பத்தா நாள் காரியம் கூட வெளில வச்சே பண்ணியாச்சு. எல்லாம் சொல்லியும் அந்த ரூம் வேணாம்னு சொல்லிட்டான். இப்ப என்னடானா அங்க போய் படுத்துருக்கான்.

ஆமாண்ணே என்னனு தெரியல. வீடு சுத்தம் பண்றப்பகூட முழு வீடும் அவரே சுத்தம் பண்ணிடுவார், அந்த ரூமுக்கு  மட்டும் என்ன பண்ண சொல்வார். இன்னைக்கு என்னன்னா அங்குன போய் படுத்துருக்காரே.

என்னங்க.. என்னாச்சும்மா. தொரை, யப்பா.
ஐயோ இப்படி ஆகிட்டுதே. நான் என்ன பண்ணுவேன். யாருக்கும் எந்த தீங்கும் நாங்க பண்ணலயே. காலைல கடை போச்சுது இப்ப என் சாமியே போயிட்டே. எல்லா சாமியும் சேர்ந்து என் சாமிய கொன்னுட்டாங்களே, என் குடிய அழிச்சிட்டாங்களே!

நன்றி

- **ரா.ராஜராஜன்**, மன்னார்குடி

# எதிர்மறையை நோக்கி மனிதர்கள்

மனிதர்கள் எதிர்மறையை நோக்கி ஜல் ஜல் ஜல் என்று அடியெடுத்து வைப்பதாக நான் உணர்கிறேன். துரோகம் என்பதை முன்னிறுத்தி கவிதை எழுதும் அல்லது பிறர் எழுதிய துரோக கவிதைகளை காப்பி அடித்து எழுதும் எவருக்குமே துரோகம் என்ற அனுபவம் நிகழ்ந்ததாக தெரியவில்லை. யாரும் அவர்களுக்கு துரோகம் செய்யவே இல்லை. இருந்தாலும் முகநூல்(facebook), பகிரி(whats app) என தனக்கு எழுத இடம் கிடைத்த இடமெல்லாம் துரோக கவிதைகளை எழுதுகிறார்கள்.

‘‘நாம் யாரை நம்புகிறோமோ அவர்கள் தான் நம்மை ஏமாற்றுகிறார்கள்‘‘ ‘‘நெருப்பின் காயத்தை கூட என் இதயம் தாங்கிவிடுகிறது. ஆனால் துரோகத்தின் காயத்தை தாங்க முடியாமல் தவிக்கிறது.‘‘ ‘‘நான் எதிரியை கூட மன்னிப்பேன், துரோகியை மன்னிக்கவே மாட்டேன்.‘‘.... இதுபோன்றேல்லாம் எழுதுவார்கள். பகிர்வார்கள். ஆனால் உண்மையில் இதுவரை அவர் நெருப்பு காயமும் பட்டிருக்க மாட்டார். துரோக காயமும் பட்டிருக்க மாட்டார். அவர்களுக்கு எதிரியும் இருக்கமாட்டார். துரோகியும் இருக்க மாட்டார். எதிரி இருந்தாலும் மன்னிக்கவெல்லாம் மாட்டார். துரோகி இருந்தாலும் தண்டித்திருக்க மாட்டார். இதுபோன்ற நிகழ்வுகளே அவர் வாழ்க்கையில் இருக்காது... இருந்தாலும் தொடர்ச்சியாக இதுபோன்ற வரிகளை தான் பகிர்வார்கள். துரோகத்திற்கு மற்றொரு வார்த்தை பயன்பாடு உள்ளது. முதுகில் குத்துதல். இந்த வார்த்தையும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படும். சினிமாவில் முதுகில் குத்தும் காட்சி வந்தாலோ, துரோகம் சம்பந்தப்பட்ட வசனங்கள் வந்தாலோ திரையரங்கமே கொந்தளிக்கும்.. ஏன் என்றே புரியாது. எனக்கும் மாட்டும் அல்ல அவர்களுக்கும் தான்.

பலர், நான் நம்பி நம்பி தான் ஏமாந்துவிட்டேன் என்பார்கள். நம்புபவர்கள் எல்லாம் தன்னை ஏமாற்றியதாக சொல்வார்கள். ஆனால் அப்படியெல்லாம் அவர்கள் யாரையும் நம்பி இருக்கமாட்டார்கள். ஏமாந்தும் இருக்க மாட்டார்கள். உண்மையில் கவனித்து பார்த்தால், ஒரு விழிப்பு நிலையற்ற ஒரு வாழ்கையை வாழ்ந்திருப்பார். அவர்கள் துரோக கவிதைகளை முன்னிறுத்த காரணம், தான் ஒரு பாதிக்கபட்டவன் என்பதில் ஒரு பெருமை இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். தனக்கு ஒரு துரோகி இருக்கிறான் என்பதும் தனக்கு துரோகம் நிகழ்ந்தது என்பதும் தனக்கான கதாநாயகன் அந்தஸ்து என கருதுகிறார்கள்..

மனிதர்கள் பெரும்பாலும் மற்ற மனிதர்களை எதிர்மறையாக தான் பார்க்கிறார்கள். ‘‘இந்த உலகம் ஆபத்தானது‘‘ என்பார்கள். ‘‘இந்த உலகில் நல்லவனே இல்லை‘‘ என்பார்கள். ‘‘நல்லதுக்கே காலம் இல்லை‘‘ என்பார்கள். ‘‘இந்த உலகம்....‘‘ என்று தொடங்கும் அத்தனை வரிகளுமே பெரும்பாலும் எதிர்மறையாக தான் இருக்கும். அவ்வாறு பேசுவது தான் பிடிக்கிறது. தன்னம்பிக்கைகாக சொல்லும் வார்த்தை கூட எதிர்மறை பண்புடன் தான் இருக்கும். ‘‘இந்த உலகம் ஜெயிச்சவன் சொன்னால் தான்

கேட்கும்‘‘ என்பார்கள். மோடி சொல்வதை யாரும் கேட்பது போல் தெரியவில்லையே!. இது எதுவுமே உண்மை இல்லை..இவை அனைத்தும் மக்கள் போலியாக வாழ்வதினுடைய வெளிபா டு. எதிர்மறை மனநிலையின் வெளிபாடு.

‘‘உன்னை அவமானப்படுதியன் முன்னாடி நல்லா வாழ்ந்து காட்டு‘‘, ‘‘உன் எதிரி முன்னாடி வாழ்ந்து காட்டு‘‘ என்பார்கள். இதையெல்லாம் தன்னம்பிக்கை வார்த்தைகள் என்றும் ஊக்குவிக்கும் வார்த்தைகள் என்றும் சொல்வார்கள். இதெல்லாம் ஒரு வாழ்வின் நோக்கமா? எதிரிக்கு முன்னாடி வாழ்ந்து காட்டுவது தான் வாழ்க்கையா? வாழ்கை என்பது நாம் நிம்மதியாக முழுமையாக வாழ்வதற்கு மட்டும் தான். அதில் ஏற்படும் வெறுப்புகளை ஊக்கம் என்று சொல்லாதீர்கள்.

ஒரு கதை சொல்கிறேன்..
ஒருவன் ஒரு பெண்ணை ஒருதலையாக காதலித்தான். அந்த பெண்ணிடம் அவன் தனது காதலை சொல்ல முயற்சிதான். தைரியம் இல்லாமல் சொல்லவே இல்லை. நண்பர்களின் உந்துதலால் ஒருநாள் தன காதலை அந்த பெண்ணிடம் தெரிவித்தான். அவள் மறுத்துவிட்டாள். அதை காதல் தோல்வி என அவன் கருதினான். ஆனால் அவனுக்குள் வருத்தமே வரவில்லை. ஆனால் வருத்தப்பட முயற்சிக்கிறான். வரவே மாட்டேங்குது வருத்தம். மிகவும் முயற்சி செய்து வருத்தபடுவதுபோல் தன நண்பர்களிடம் பேசி பார்க்கிறான். அந்த பெண்ணுக்கு காதலனாக எடுத்த முயற்சியை விட, காதல் தோல்வியாளனாக எடுக்கும் முயற்சிகள் அதிகம். அவன் நண்பர்களுக்கும இதில் வருத்தம் வர வில்லை. இதை காதல் தோல்வியாகவே அவர்களும் கருதவில்லை. ஆனால் நல்ல நண்பர்கள் போல் ஆறுதல் சொல்ல முயற்சித்து நடிக்கிறார்கள். அவன் அழுவதற்கு முயற்சிக்கிறான் வரவே இல்லை. கண்ணீர் துளியும் இல்லை. திடீரென தனது நண்பன் ஒரு ஜோக் அடிக்கிறான். உடனே அந்த காதல் தோல்வியாளன் வல்லுனு விழுந்து சிறுத்தான்.

இதுபோல் தான் பெரும்பாலான மனிதர்கள் இளைஞர்கள். வாழ்க்கையில் சோகம் இல்லை, காதல் இல்லை, காதல் தோல்வி இல்லை, எதிரி இல்லை, துரோகி, துரோகம் இல்லை. ஆனாலும் வராத சோகத்தை வா வா என்று அழைக்கிறார்கள். சோகம் இல்லாமல் இருப்பதை விட சோகம் அடைந்த ஒருவனாக இருப்பது கதாநாயகன் அந்தஸ்த்தாக கருதுகிறார்கள். வாழ்க்கையில் சோகம் இருந்தால் தான் மனிதன் என்று நம்புகிறார்கள். அதற்காக மனதில் சோகமே இல்லாமல் சோகமாய் இருந்தால் அவன் மனிதனே இல்லை... சோக பாட்டு கேட்க தான் பிடிக்கிறது உளவியலாக.


ஒரு தேர்தல் வந்தால் எந்தெந்த கட்சிகள் களத்தில் இருக்கிறது என்பது தெரியாது. வேட்பாளர்கள் யாரென்று தெரியாது. எந்த கட்சியின் கொள்கைகளுமே தெரியாது. ஒவ்வொரு கட்சியும் என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்திருக்கு என்பதை படிப்பது கிடையாது. படிப்பதற்கு அழுப்பு. தேர்தலில் வாக்களிக்க விருப்பம். ஏனென்றால் அது திருவிழா போல் இருக்கிறது. ஆனால் அரசியல் தெரியாது. இதற்காக ஒரு சப்பைக்கட்டு

கட்ட வேண்டும்.. ‘‘அரசியலில் எவன் நல்லவன் இருக்கான்? எல்லாருமே ஒன்னு தான். எல்லாருமே கெட்டவன் தான்.‘‘ என்றொரு சப்பைக்கட்டு கட்டிவிட்டு ஏற்கனவே ஆட்சி செய்த ஏதாவதொரு கட்சிக்கு வாக்களிப்பார்கள். எதிர்மறையே இவர்கள் இயல்பாகிவிட்டது.



நிரஞ்சன்

உண்மையாகவே நம் அனைவருக்கும் துரோகிகளும், எதிரிகளும் இருக்கிறார்கள் தான். அவர்கள் உங்கள் உறவினர்களோ, நண்பர்களோ, பக்கத்துக்கு வீடுகாரரோ, எதிர் வீட்டுக்காரரோ, உடன் பணிபுரிபவரோ, காதலியோ, மனைவியோ, பிள்ளைகளோ, உடன் பிறந்தவர்களோ அல்ல. அவர்கள் உங்கள் வாழ்வியலை சுரண்டுகிறார்கள், உங்கள் நிலத்தை பறிக்கிறார்கள், உங்கள் உழைப்பை சுரண்டுகிறார்கள், உங்கள் வாழ்கை மற்றும் சிந்தனைகளை வடிவமைக்கும் பணியை செய்கிறார்கள். இன்னும் வேலி சண்டை போட்டுக்கொண்டே இருந்தால் நிலம் இருக்காது. கிறுக்கு தனங்களை விட்டுவிட்டு, மனித வெறுப்புகளை விட்டுவிட்டு, அனைத்தையும் நேசிக்க தொடங்கு.. அனைத்தையும் மீட்டுவிடலாம்.



நிரஞ்சன் கைவண்ணத்தில்....

# இந்தியா வல்லரசு ஆகுமா?

இங்கு வல்லரசு என்பது எதன் அடிப்படையில் அளக்கப்படுகிறது? கல்வி, வேலைவாய்ப்பு, தொழில், பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றம் அடைவதிலா? அப்போது, இந்த முன்னேற்றத்தின் மூலம் மக்களின் மனநிலை என்ன? அவர்களுக்கு இவை மகிழ்ச்சியளித்தனவா என்பதெல்லாம் ஒரு பொருட்டாக கருதப்படுமா? மக்களின் மனநிலையை கருத்தில் கொள்ளாமல், எட்டு வழிச் சாலை, ஹைட்ரோ கார்பன் போன்ற திட்டங்களை அனுமதித்து அதன்மூலம் பெறும் முன்னேற்றத்தினால் நம் நாடு வல்லரசாக வேண்டுமெனில், அத்தகைய வளர்ச்சி நமக்கு தேவையா? அப்படியானால், உண்மையான வளர்ச்சி என்பது மக்களின் மகிழ்ச்சியைப் பொறுத்து தான் இருக்க வேண்டுமேயென்றி, சாலைகளை அகலப்படுத்துவதிலோ, எரிவாயுக்களை உறிஞ்சி எடுப்பதிலோ இல்லை என்பதை நாம் இங்கு உணர வேண்டும். இங்கே நாகரீகம், வளர்ச்சி என்ற போர்வையில் நாம் அழிக்கப்பட்டுக் கொண்டு வருகிறோம் என்பதை உணர வேண்டும்.

நாம் என்பது தமிழ் மக்களை மட்டும் குறிப்பதல்ல, இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு இந்திய பிரஜையையும் குறிக்கிறது. கி.பி.1173 ஆம் ஆண்டு இத்தாலியில் கட்டப்படும் ஒரு கோபுரம், தவறான கட்டமைப்பினால் சாய்ந்து விடுகிறது. அந்த சாய்ந்த கோபுரத்தை உலக அதிசயங்களில் ஒன்றாக கருதும் இவ்வுலகம், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட தஞ்சை பெரிய கோவிலை, உலக அதிசயங்களில் ஒன்றாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

அதில் என்ன பெரிய விந்தை என கேட்போரும் நம்மில் பலர் உள்ளனர். பல நூறு வருடங்களுக்கு பின்னரும் சிறிதும் தலை சாயாமல், செங்குத்தாக நிற்கும் ராஜ கோபுரம் மட்டுமல்லாது, கோவிலின் வெளி கோபுரத்தில் தொடங்கி, உட்கோபுரம், நந்தியின் மையம், கொடிக் கம்பம், ராஜ கோபுரம் என அனைத்தும் ஒரே நேர்கோட்டில், ஒரு அடி அளவேணும் பிசகின்றி அமைக்கப்பட்டது அதிசயத்தின் உச்சம்.

அதுமட்டுமின்றி, அந்த கோயிலை கட்டி எழுப்ப உதவிய சாதாரண வெகு ஜனங்களில் தொடங்கி, அந்த வெகு ஜனங்களிற்கு ஆடை துவைத்து கொடுத்தவனின் பெயரையும், முடி திருத்தியவனின் பெயரையும், தாகம் தீர்க்க மோர் வழங்கியவரின் பெயரையும் ஒரு மன்னன், அந்த கோவில் கல்வெட்டுகளில் செதுக்கி அவர்களை கௌரவிக்கின்றான் என்றால், அதை விட ஒரு வல்லரசு நாடு உலகினில் இருந்திருக்க இயலுமா.?

ஏற்கனவே, ராஜ ராஜ சோழனைப் பற்றி பல விவாதங்கள் போய்க் கொண்டிருக்கையில், நீங்கள் கொடி பிடிப்பதை பார்த்தால், நீங்கள் ஆதிக்க சாதியை சேர்ந்தவரா என வெகுண்டெழ வேண்டாம். சரி, இன்னும் ஆயிரம் ஆண்டுகள்

பின்னோக்கி செல்வோம். பண்டைய மதுரை என அழைக்கப்படும் கீழடிக்கு செல்வோம்! அங்கு சாதி மட்டுமல்ல, மதமும், கடவுளும் கூட இருந்ததற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

இயற்கையும், அன்பும் மட்டுமே கடவுளாக போற்றப்பட்ட காலம். மக்கள் மகிழ்ச்சியுடனும் நாகரீகத்துடனும் வாழ்ந்ததற்கான சான்றுகள் அங்குள்ளன. இப்பொழுது வல்லரசு நாடுகளாக கூறப்படும் நாடுகளில், 2000 வருடத்திற்கு முன்பான நாகரீகம் உண்டா? அதற்கான ஆதாரங்கள் உண்டா.?

நாகரிகம், வளர்ச்சி, சாதி, மதம் என்னும் பல வேற்றுமைகளைக் கொண்டு நம்மை கையாள்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது இங்கே அவசியமாகிறது. நீங்கள் தமிழ் தேசியவாதியா? எல்லோரையும் ஆடு, மாடு மேய்க்க சொல்கிறீர்களா? என கோபம் கொள்ள வேண்டாம்.

பழைய வரலாறுகளை படித்து, சில கருத்துகளை தெரிவிப்பன் தமிழ் தேசியவாதியாக இருக்க வேண்டிய அவசியமில்லை, படித்த பாமரனாகக் கூட இருக்கலாம். இங்கே எந்த வளர்ச்சியையும் எதிர்ப்பது என் நோக்கமல்ல. ஒரே ஒரு கேள்வி தான் இங்கே முன்வைக்கப்படுகிறது, எந்த தொழில்நுட்பமும் இல்லாத காலத்தில் மக்கள் மகிழ்ச்சியாய் வாழ்ந்து வந்த பொழுது, இங்கே இவ்வளவு பட்டதாரிகள் வந்தும், கல்வியிலும், தொழில்நுட்பத்திலும் பல உன்னத நிலைகளை அடைந்த பின்பும் ஏன் மக்களையும், மண்ணையும் மலடாக்கி ஒரு வளர்ச்சி இங்கே தேவைப்படுகிறது.

அவ்வாறு பெறும் வளர்ச்சி தான், நம் தாய் நாட்டை வல்லரசு ஆக்குமெனில், அத்தகைய வளர்ச்சி நமக்கு தேவையா? அல்லது, மாற்று சிந்தனை இங்கு தேவையா? என்பதை நாம் ஆராய வேண்டும். சாதிய ஒடுக்குமுறைகளை பேசுவதாகக் கூறி, இங்கே சாதிய முறைகள் மீண்டும் வலுப்பெறுகின்றன என்பதை மட்டும் இறுதியாக கூறிக் கொள்ள விழைகிறேன்.

**- விஜயவர்மன்**

# நாட்டுக்கோழி

<u>கோழிகளின் வகைகள்</u>
தமிழகத்தில் இரு வகையான கோழிகள் உள்ளன சிறுவிடை, பெருவிடை. இந்த இருவகை கோழிகளுமே காட்டில் வாழ்ந்தவை.

<u>சிறுவிடை கோழிகள்</u>
சிறுவிடை கோழிகள் இவை திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களில் காணப்படும் ஓர் சிறிய வகை கோழியாகும். சிறுவிடை கோழிகள் சேவல் 7 மாதத்திலும் பெட்டை 7,8மாதத்திலும் பருவம் அடைகிறது. பருவம் அடைந்த சேவல் 1.4 கி. கிராம் முதல் 1.9கி. கிராம் எடையும், பெட்டை 800 கி. கிராம் முதல் 1.4கி. கிராம் வரை எடை இருக்கும். பெட்டை கோழி வருடத்திற்கு 3 முதல் 5 முறை வரை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும்.
ஒரு முறை முட்டையிடும் போது 8 முதல் 15 முட்டைகள் வரை இடும். நல்ல உணவு முறை இருந்தால் அதிகபட்சமாக 20 முட்டைகள் இடும். முட்டையின் எடை 25 கிராம் முதல் 35 கிராம் வரை இருக்கும். இதில் உள்ள சிறப்பு என்னவென்றால் அயல் நாட்டு கோழிகளைப்போல் சேவலுடன் இணை சேராமல் முட்டை இட தெரியாது.

<u>நாட்டுக்கோழி</u>
நாட்டுக்கோழி தமிழர்களின் வாழ்க்கை முறையில் விவசாயம் எப்படியோ அப்படிதான் கால்நடைகளும் அதிலும் கோழி மிக முக்கியமானது. ஏன் என்றால் கோழியின் உணவு முறை விவசாய நிலத்தில் உள்ள புழு பூச்சிகளை உணவாக உட்க்கொள்ளும். இதனால் விவசாய நிலத்தில் உள்ள பயிர்களை நாசம் செய்யகூடிய பூச்சிகள் அழிக்கப்படும். உண்ட உணவை செரித்து அதை கழிவாக வெளியேற்றி மண்ணுக்கு உரமாக்குகிறது கோழிக்கென்று தனியாக உணவு கொடுத்து செலவு செய்ய தேவையில்லை. தனக்கான உணவை தானே தேடிக்கொள்ளும் இதனால் விவசாயிகளுக்கு மற்ற கால்நடைகளை காட்டிலும் லாபம் அதிகம்

<u>பெருவிடை கோழிகள்</u>
பெருவிடை கோழிகள் மதுரை, தெனி, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி வேலூர், சேலம் போன்ற மாவட்டங்களில் காணப்படும். பெயருக்கு ஏற்றார்போலவே உருவத்தில் பெரியதாக இருக்கும் பெருவிடை சேவல் 7 மாதத்திலும் பெட்டை 8 மாதத்திலும் பருவம் அடைகிறது. சேவல் 2.3கி.கிராம் முதல் 3.5கி.கிராம் உடையும், பெட்டை கோழி 1.600கி. கிராம் முதல் 2.400கி.கிராம் எடையும் இருக்கும். பெட்டை கோழி வருடத்திற்கு 3 முதல் 5 முறை வரை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். ஒரு முறை முட்டையிடும் போது 7 முதல் 12 முட்டைகள் வரை இடும். முட்டையின் எடை 35 கிராம் முதல் 45 கிராம் வரை இருக்கும்.

தமிழ் நாட்டில் காணப்படும் பிற மாநில நாட்டு கோழிகள்
கழுத்தறுத்தான் கோழி
நிக்கோபாரி
கருங்கோழி
அசில்.

கழுத்தறுத்தான் கோழி
இந்தவகை கோழி கேரளாவை சேர்ந்த நாட்டுக்கோழி. இந்த கோழிக்கு பல பெயர்கள் உண்டு. மொட்டைகழுத்து கோழி, கிராப்பு கோழி, கழுகுகோழி. கேரளாவிற்கு அருகில் உள்ள கன்னியாகுமரி, நாகர்கோவில், மார்த்தாண்டம் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிகம் காணப்படும். இந்த வகை கோழி சிறுவிடை பண்புகளையே கொண்டது. இவை வருடத்திற்கு 60 முதல் 85 முட்டைகள் வரை இடும். இதன் தனி சிறப்பு நோய்கள் இந்தவகை கோழிகளை அதிகம் தாக்குவது இல்லை. காரணம் இதன் கழுத்துப்பகுதியில் இறகுகள் இல்லாததால் உடலின் வெப்பநிலை சீராக வைத்துக்கொள்கிறது. இதன் இறைச்சி சுவை மிக்கது.

நிக்கோபாரி
நிக்கோபாரி இந்தவகை கோழி அந்தமான் நிக்கோபார் பகுதியை சார்ந்த நாட்டுக்கோழி. இந்த வகை கோழி கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் சிகப்பு கொண்டையுடன் காணப்படும். அதனால் இதில் உள்ள வெள்ளை நிறக்கோழி பல இடங்களில் அழகு கோழியாக வளர்க்கப்படுகிறது. இவை வருடத்திற்குப் 60 முதல் 80 முட்டைகள் வரை இடும். தற்போது தமிழகத்தில் அதிகம் காணப்படுகிறது

கருங்கோழி
இந்த வகை கோழி கலப்பு கோழி இனம் என்று பலராலும் பேசப்படுகிறது. ஆனால் இந்தவகை கோழி தூய நாட்டு கோழி இனம். மத்தியபிரதேசத்தை சார்ந்த நாட்டுக்கோழி ஆகும். இதன் தனி சிறப்பு உடல் முழுவதும் கருப்பு நிறத்தில் இருக்கும். இதன் கண், முக்கு கால்கள், இரத்தம், ஏன் இதன் இறைச்சி கூட கருப்பு நிறத்தில் இருக்கும். இதன் இறைச்சி சுவை அனைத்து கோழிகளின் இறைச்சியின் சுவையில் இருந்து மாறுபட்டு இருக்கும். இந்த கருங்கோழியில் மருத்துவ குணம் உள்ளது இதன் முட்டையிலும் மருத்துவகுணம் உள்ளது.

அசில்
ஆந்திராவை சார்ந்த நாட்டுக்கோழி இனமாகும். பார்ப்பதற்கு பெரிதாக இருக்கும். நம் நாட்டு கோழி இனமான பெருவிடை கோழிகளின் பண்புகளை கொண்டு இருக்கும். சண்டை இனமாக வளர்க்கப்படுகிறது.

நாட்டு கோழி இறைச்சி
பிராய்லர் கோழி இறைச்சி சாப்பிடுவதால் பல உடல்நலம் சார்ந்த பிரச்சனைகள்

உண்டாக்குகின்றன. இதற்கு மாறகவே உள்ளது நாட்டு கோழி இறைச்சி. நாட்டு கோழி இறைச்சி உண்பதால் எந்த பக்கவிளைவுகளும் இல்லை. இயற்கை தந்த உணவு பொருட்களை உண்போம். இயற்கை சார்ந்து வாழ்வோம். நலமோடு வாழ்வோம்.

ஜில்லு தூய நாட்டு கோழி பண்ணை

எங்களிடம் மேய்ச்சல் முறையில் வளர்க்கப்பட்ட நாட்டுகோழிகள், முட்டைகள், வான்கோழி, காடை மற்றும் காடை முட்டைகள் கிடைக்கும்

## மன்னை பிரவீன் குமார்

ஜில்லு பண்ணை மேற்பார்வையாளர்

# ஆனந்த பூமி!!

அரசியல் பழகு
ஆயிரமாயிரம் புதுமைகள் படை
இயலாமை உடை
ஈகை மண்ணின் ஈரம் உணர்
எதிரிகளை வெட்டியெடு
ஏகபோகமாய் வீரம்கொள்
ஐயம் அறவே கொல்
ஒட்டியிருக்கும் இலஞ்சம் ஊழல் கிருமிகள் ஒழி
ஓடோடி உதை பொய்யொழுகும் பொய்த்தலைவனை
ஔவை சொன்னதை புதுமையாக்கு
அஃதெல்லாம் அழிந்து அங்கே
நம் சந்ததிக்கு வேண்டும் அழகான ஆனந்த பூமி...!!

**வி. முத்துக்குமார்...**

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்**
**பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal Thiravukolmagazine